## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


01.09.2019 பொதுக்காலம் 22ம் ஞாயிறு - திருப்பலி 02

03.09.2019 புனித பெரிய கிரகோரி - திருப்பலி 03

05.09.2019 கொல்கொத்தா நகர்ப் புனித அன்னை தெரசா-திருப்பலி 04

08.09.2019 பொதுக்காலம் 23ம் ஞாயிறு, புனித வேளாங்கண்ணி அன்னை பெருவிழா - திருப்பலி 06

12.09.2019 புனித மரியாவின் திருப்பெயர் விழா - திருப்பலி 07

13.09.2019 புனித யோவான் கிறிசோஸ்தோம் - திருப்பலி 09

14.09.2019 திருச்சிலுவையின் மாட்சி - திருப்பலி 10

15.09.2019 பொதுக்காலம் 24ம் ஞாயிறு - திருப்பலி 11

21.09.2019 புனித மத்தேயு - திருப்பலி 12

22.09.2019 பொதுக்காலம் 25ம் ஞாயிறு - திருப்பலி 13

24.09.2019 அலங்கார உபகார மாதா - திருப்பலி 15

27.09.2019 புனித வின்செண்ட் தே பால் - திருப்பலி 16

29.09.2019 பொதுக்காலம் 26ம் ஞாயிறு - திருப்பலி 17

30.09.2019 புனித ஜெரோம் திருவிழா - திருப்பலி 19


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


1. அருள்மிகப் பெற்றவளே வாழ்க 20
2. புனித அன்னை தெரசா, ஆசிரியர் தினவிழா 22
3. அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் அவரது குழுவினர் 25
4. திருஅவைச் செய்திகள் 27

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 01.09.2019 பொதுக்காலம் 22ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. சீரா 3: 17-18,20,28-29 II. எபி 12: 18-19, 22-24 லூக் 14: 7-14

இன்று திருஅவையானது பொதுக்காலம் 22ம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு நம் அனைவரையும் அன்புடன் அழைக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் எல்லா சூழ்நிலையிலும் தாழ்ச்சி என்னும் புண்ணியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறோம். பணிவு, அடக்கம் இவைகளைக் கடைப்பிடித்தால் ஆண்டவரின் பரிவுகிட்டும் எனவும் இறுமாப்புடன் வாழ்ந்தால் அழிவுதான் மிஞ்சும் எனவும் இரண்டாம் வாசகம் நம்மை எச்சரிக்கிறது.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு விருந்துக்கு யாரை அழைக்க வேண்டும் என்ற செய்தியை நமக்குத் தெளிவாகத் தருகிறார், தாழ்ச்சியாக வாழ நம்மை அழைக்கிறார். ஆனால் இஸ்ரயேல் மக்களில் பரிசேயரும், சதுசேயரும் எப்பொழுதும் தாங்கள் உயர்ந்த இடத்திலே இருக்க வேண்டும், மற்றவர்களால் மதிக்கப்பட வேண்டும் என்று நினைப்பவர்கள். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு இங்கு நிலவுவதை இயேசு பார்க்கிறார். விருந்துக்கு மதிப்புக்குரியவர்களையே அழைப்பதைவிட ஏழைகள், உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர் ஆகியோரை அழைக்கச் சொல்கிறார். ஏனென்றால் இவர்களிடம் திரும்பக் கொடுக்க ஒன்றுமில்லை. இருப்பவர்கள் இல்லாதவர்களிடம் பகிர்ந்து கொள்ளத்தான் இறைவன் ஒரு சிலருக்குச் செல்வத்தைத் தந்துள்ளார். ஆண்டவருடைய திருவிருந்தும் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடு எதுவுமின்றி அனைவருக்கும் பகிரப்படுகிறது. திருப்பலியில் இறைவன் தரும் சமபந்தியில் பங்கு கொள்கிறோம். இந்த விருந்தினை உட்கொள்ள நம்மை நாம் தாழ்த்தி நம் குற்றங்குறைகளை ஏற்றுக்கொண்டு கல்வாரித் திருப்பலியில் பங்கேற்போம், சமத்துவம் ஓங்க!

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. மனத்தாழ்ச்சியுள்ளவரே, எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் ஏற்றத்தாழ்வு பார்ப்பவர்களாக வாழாமல் தாழ்ச்சியோடு நடந்து உமக்காக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அமைதியின் அரசரே இறைவா, உலகிலுள்ள தலைவர்கள், ஆட்சியாளர்கள் தங்களுடைய பாதுகாப்பில் உள்ள மக்களை அமைதி வழியில் நடத்திச் செல்ல வேண்டுமென்றும், நாடுகளுக்கிடையே போர், கலவரம் ஏற்படாமல் ஒற்றுமையுடன் சகோதர அன்பில் நிலைத்து வாழ வழிநடத்த வேண்டுமென்றும் உம்மை மன்றாடுகிறோம்.

3. நீங்கள் அனைவரும் சகோதரர்கள் என்றவரே, மிகச்சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்யும் உதவிகள் எனக்குச் செய்யப்பட்டது ஆகும் என்று சொன்ன இயேசுவின் வார்த்தைகளை வாழ்வாக்கி நாங்கள் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. ஒற்றுமையின் ஒளிவிளக்கே இறைவா, எங்களிடையே வாழும் மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையோடும், சமாதானத்தோடும், விட்டுக்கொடுத்து வாழும் நல்ல உள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 03.09.2019 புனித பெரிய கிரகோரி திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

இறையேசுவில் பிரியமுள்ள இறைமக்களே, புனித பெரிய கிரகோரியாரின் நினைவு விழா திருப்பலியில் பங்கேற்று ஆசீர்பெற வந்திருக்கும் நாம் அனைவரும் மிகப் பேறுபெற்றவர்கள். காரணம், நம்பிக்கையின் மக்களாக இன்றுவரை நாம் நிலைத்திருக்கச் செய்தது இவர் கொண்டுவந்த வழிபாட்டு முறையும் திருஅவையின் கொள்கைக்கு இவர் இட்ட அடித்தளமுமே ஆகும். இளம் வயதிலேயே பல சாதனைகளைச் செய்தவர். தனது 30வது வயதில் உரோமை நகர் காவலர் என்ற பெரிய பதவியை 5 ஆண்டுகாலம் வகித்தார். சிசிரியில் பல இடங்களில் 6 துறவற மடங்களை நிறுவினார். இவரும் உரோமையில் ஆசீர்வாதப்பர் சபைத் துறவியானார். குருவான பின் கீழ்த்திருஅவையின் கான்ஸ்டன்டைன் நோபிளில் தங்கி திருத்தந்தையின் தூதுவராகப் பணியாற்றினார். நாளடைவில் மீண்டும் உரோமைக்கு அழைக்கப்பட்டு மடாதிபதியாகவும் தனது 50வயதில் திருத்தந்தையாகவும் உயர்த்தப்பட்டார். நேர்மையானவர், தகுதியில்லா அருட்பணியாளர்களை பணியிலிருந்து நீக்கினார். சிறைப்பட்டவர்களை மீட்டார். இதற்காக திருத்தந்தையின் கருவூலத்திலிருந்து பணம் நிறைய செலவிட்டார்.

எல்லாவற்றிற்கும் மேலாக தான் திருத்தந்தையாகப் பணிபுரியும்போது தாழ்ச்சியுடன் பணிபுரிவதை விரும்பியவர். அதன் அடையாளமாக தனது மடல்களில் "இறைவனின் ஊழியர்களிளெல்லாம் கடை ஊழியன்" என இணைத்து கையெழுத்து இடுவார். இம்முறை இன்றுவரை அனைத்து திருத்தந்தையர்களாலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இன்றைய வாசகமும் நற்செய்தியும் நமக்கு அறிவுறுத்துவதும் இதுவே. இறைத்திட்டமும், இறைவன் வருகையும் நாம் அறிந்திருந்தாலும், அவரின் வருகை எப்போது எப்படி என நமக்குத் தெரியாது. ஆனால் ஒளியின் மக்களாக விழிப்போடும் அறிவுத் தெளிவோடும், வல்லமையோடும் பெற்ற கொடைகளுக்கு ஏற்ப

எல்லாவற்றிற்கும் மேலாக பணிவோடும், நம் மீட்புக்காக மட்டுமன்று அனைவரின் விடுதலைக்காகவும் இப்புனிதரைப்போல நேர்மையாக, உண்மையாக வாழ இன்று உறுதியேற்போம். இத்திருப்பலி வழியாக நாம் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் தாய் திருஅவையின் ஊழியர்களாகிய எம் திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவிகள் அனைவரும் புனித பெரிய கிரகோரியார்போல நேர்மையுடன் திருஅவையின் நலனுக்காகவும், உலகிற்கு எடுத்துக்காட்டாகத் திகழவும் உழைக்கவும் வேண்டிய வல்லமையைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பு இறைவா, திருஅவையும் இச்சமூகமும் மறுமலர்ச்சி பெற்று அன்பும் அமைதியும், ஒற்றுமையும், சமாதானமும், மகிழ்வும் கொண்டனவாக மாறி, மக்கள் அனைவரும் நலமோடு வாழ புனித பெரிய கிரகோரியாரின் வல்லமையுள்ள மன்றாட்டால் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. உம் தியாகத்தினால் எங்களை மீட்ட தந்தையே, அன்னை மரியாள் தன் தியாக வாழ்வின் மூலம் தன் வாழ்வை காத்துக்கொண்டதுபோல, பிறரன்புப் பணி செய்து நாங்களும் எங்கள் வாழ்வை காத்துக்கொள்ளும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 05.09.2019 புனித அன்னை தெரசா & ஆசிரியர் தினம் திருப்பலி

**முன்னுரை** திரு. விக்டர்

செப்டம்பர் 5ம் தேதியில் ஆசிரியர் தின விழாவைச் சிறப்பிக்கும் நாம் இந்நாளில் ஆசிரியராய் பணியாற்றி அருள் வாழ்வில் தன்னை இணைத்துக்கொண்ட புனித அன்னை தெரசாவின் திருவிழாவையும் சிறப்பிக்கின்றோம். "உன்மீது நீ அன்பு கூறுவதுபோல உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக" (மத் 22: 39) என்ற ஆண்டவர் இயேசுவின் அமுத மொழிக்கிணங்க வாழ்ந்துச் சென்றவர் புனித அன்னை தெரசா. கொல்கொத்தா நகரில் அவர் பார்த்த ஏழை மக்களின் கடின வாழ்வு, அநாதைப் பிள்ளைகளின் அவல வாழ்வு, கைவிடப்பட்ட நோயாளிகளின் நிலை அவரை வெகுவாகப் பாதித்தன. 1950ல் அன்பின் பணியாளர் (Missionaries of Charity) என்கிற கத்தோலிக்க துறவற சபையை நிறுவினார். இச்சபையினர் சமுதாயத்தில் கைவிடப்பட்ட அநாதைக் குழந்தைகள், நோயினால் புறக்கணிக்கப்பட்ட முதியவர்கள், எயிட்ஸ் மற்றும் புற்று நோயால் பாதிக்கப்பட்டு இறப்பின் விளிம்பில் இருப்பவர்கள், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் இப்படி பல்வேறுபட்ட மக்களுக்கும் இலவசமாக அன்புடன் பணிசெய்து வந்தனர்.

1979ல் உலக அமைதிக்கான நோபல் பரிசு அன்னை தெரசாவுக்கு வழங்கப்பட்டது. இந்தியாவின் மிக உயரிய விருதான "பாரத ரத்னா" விருது 1980ல் அன்னை தெரசாவுக்கு வழங்கப்பட்டது. இது மட்டுமல்லாமல் பல்வேறு சர்வதேச விருதுகளையும் அவர் பெற்றார். உலக மக்களால் "அன்னை தெரசாள்" (Mother Theresa) என்று அன்பாய் போற்றப்பட்ட அன்னை தெரசாள் 1997ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ம் தேதி இறைவனோடு இணைந்தார். அவரது உடல் அரசுமுறைப்படி இறுதி மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அன்னை தெரசாளுக்கு 2016ம் ஆண்டு செப்டம்பர் 4ம் தேதி புனிதர் பட்டமளித்து சிறப்பித்தார். அன்னையின் வாழ்வு நமக்குப் பாடமாக அமையட்டும். அன்பு ஆண்டவரின் அருட்பணியில் நம்மை இணைத்துக்கொண்டு, நம்மிலும் எளியவருக்கு, நம்மாலான உதவிகளைச் செய்து, ஆண்டவர் பெயரை மகிமைப்படுத்துவோம். இதற்கான வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எம்மை அதிகமாய் அன்பு செய்யும் இறைவா, இவ்வுலகில் உமது மக்களை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளுக்காகச் செபிக்கின்றோம். இவர்கள் உமது தூய ஆவியாரால் நிரப்பப்பட்டு, திடப்படுத்தப்படவும், பலப்படுத்தப்படவும் வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. இறையன்பில் எம்மை வழிநடத்தும் இறைவா, புனித அன்னை தெரசாளை உமது சாட்சியாக இவ்வுலகில் வாழச்செய்து எமக்கெல்லாம் மாதிரி காட்டினீரே, ஏழை எளியவர் மட்டில் அன்னை கொண்டிருந்த அன்பும், அவர்களுக்குப் பணி செய்ய வேண்டுமென்ற விருப்பமும் எம்மிலும் வளர்ந்து பெருகவேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் வழிகாட்டியே எம் இறைவா, ஆசிரியர் பணிசெய்யும் ஒவ்வொருவரையும் உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். தங்களின் பணி உலகப்பொருட்களை சம்பாதிக்கும் பணியல்ல, இறைவனின் செல்வத்தை சேர்க்கும் பணி என்பதை உணர்ந்து தாராள சேவை மனதுடன் தங்களிடம் வரும் பிள்ளைகளுக்கு கல்விகற்க உதவிபுரியும் மனதைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

4. இயற்கையைப் படைத்து பாதுகாக்கும் இறைவா, ஒருவார்த்தையால் இவ்வுலகையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினீர். நீர் உத்தரவிட காற்று நின்றது, நீர் உத்தரவிட கடலும் கீழ்ப்படிந்தது. இந்நாட்களில் மழையின்றி வாடும் எமது தமிழ் நாட்டில் உமது அருள்மழையைப் பொழிந்து எம்மையும் எம் நாட்டையும் செழிப்பாக்கிட வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

# 08.09.2019 பொதுக்காலம் 23ம் ஞாயிறு மற்றும் புனித வேளாங்கண்ணி அன்னை பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. D.V.R. ராஜா

I. சாஞா 9: 13-18 II. பில 9: 10, 12-17 லூக் 14: 25-33

இறையேசுவில் அன்புள்ள அன்னையின் பக்தர்களே, இன்று நமது திருஅவையானது ஆரோக்கிய அன்னையின் பெருவிழாவைக் கொண்டாடுகிறது. அன்னை மரியாள் இயேசு கிறிஸ்துவின் தாய் என்பதால் அவர் எல்லாருக்கும் தாய் என்ற உயரிய சிந்தனையில் அன்னைக்கு வணக்கம் செலுத்துகிறோம். உலகமெங்கும் அன்னை மரியா பல்வேறு இடங்களில் பலமுறை பலருக்குக் காட்சியளித்துள்ளார். அவ்வாறு தஞ்சை மறைமாவட்டம், நாகை மாவட்டத்தில் கோரமண்டல் நகர் என்று போர்த்துக்கீசியரால் அழைக்கப்பட்ட வேளாங்கண்ணி நகரில் புனித ஆரோக்கிய அன்னை திருத்தல பேராலயம் வங்கக்கடலின் ஆரவாரத்திற்கு அருகே அமையப் பெற்றுள்ளது. இது கீழை நாடுகளின் லூர்து நகர் என்று உலகளாவிய பெருமையைக் கொண்டுள்ளது. இவ்வாலயம் 16ம் நூற்றாண்டின் இறுதியில் சிற்றாலயமாக இருந்தது. களிமண்ணாலான ஆலயத்தை 17ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போர்த்துக்கீசியர்கள் சிலர் கடல் பயணத்தில் உயிர் பிழைத்து கரை சேர்ந்ததும், அங்கு அன்னை காட்சி அளித்த இரு பெரும் நிகழ்வுகள் நடந்ததும் செப்டம்பர் 8ம் நாள் ஆகும். நன்றியின் வெளிப்பாடாக அன்னைக்கு பிரமாண்டமான ஆலயம் எழுப்பப்பட்டு ஆண்டுதோறும் ஆகஸ்டு 29ம் நாள் கொடியேற்றத்துடன் துவங்கி செப்டம்பர் 8ம் நாள் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பழைய ஆலயம் மற்றும் மாதா குளம் அமைந்துள்ள அதே பழைய வேளைநகரில் புதுமைகள் பல நிகழ்த்தி அன்னை திருக்காட்சி அளித்துள்ளார். உலகெங்கும் உள்ள அனைத்து சாதி, சமய, மத, இனத்தவர் பாகுபாடின்றி பரமனின் தாய், எமக்கும் தாய் என்ற உணர்வோடு வணக்கம் செலுத்தியும், நன்றிகள் பல கூறியும் தங்கள் இன்னல்கள், நோய்கள் பிரச்சனைகளிலிருந்து விடுதலைப் பெற்று சான்று பகர்கின்றனர்.

இன்றைய வாசகங்களில் கூறுவது கடவுளின் திட்டத்தையும் எண்ணங்களையும் அறிய வல்லவர் யார்? அவரே நமக்கு அறிவித்தாலன்றி, அவற்றை அறிய ஞானத்தைத் தந்தாலன்றி நாம் எப்படி கடவுளின் எண்ணத்தை அறிய இயலும்? ஆதலால்தான் சாலமோன் இறைவனிடம் ஞானத்தை மட்டுமே வேண்டி நின்றார். அதன் வாயிலாக அவர் எல்லாவற்றையும் பெற்றார். அவ்வாறே அன்னை மரியாளும் ஞானத்தின் மொத்த உருவமாகத் திகழ்கிறார். மேலும் இன்றைய நற்செய்தியில் என்னைத் தவிர வேறு எதன்மீதும் பற்றுக்கொள்ள வேண்டாம் என்று ஆண்டவர் கூறுகிறார். உறவுகளின்மீதோ உலகிலுள்ள பிறவற்றின்மீதோ

பற்றுள்ளவன் எனக்கு ஏற்புடையவன் அல்லன் என்கிறார். எனவே புனித ஆரோக்கிய அன்னையைப்போல நாமும் ஆண்டவர் ஒருவர்மீதே நம்பிக்கைக் கொண்டு நமது முழு ஆன்மாவோடும் வலிமையோடும் நன்றியுடன் துதித்து ஆரோக்கிய அன்னையின் துணையோடு நலன்களையும் ஆசீரையும் பெற்றுக்கொள்ள இத்திருப்பலியில் வேண்டுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் ஊற்றாகிய இறைவா, திருஅவையை வழிநடத்தும் எமது திருத்தந்தையையும் அவரின் உடல் உள்ள நலன்களையும் பாதுகாத்து, அவருடன் சேவை செய்யும் அனைத்து துறவறத்தாரையும் நல்வழியில் நடத்தி மக்கள் இவர்களில் கிறிஸ்துவைக் காணத் தேவையான அருளாசீரை தரவேண்டி புனித ஆரோக்கிய அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
2. நல்லாயனாகிய இறைவா, எமது பங்குத்தந்தை, ஏறெடுக்கும் பணிகள் சிறக்க, பங்கு வளர்ச்சிப் பெற, பங்கு மக்களின் குறைகள் அறிந்து அவற்றைக் களைய நீரே அவரோடு இருந்து அவருக்கு உடல் உள்ள நலனை அளித்து தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட வேண்டிய ஆசீரையும் அருளையும் நல்க புனித ஆரோக்கிய அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. நீதியின் இறைவா, எம் மக்கள் உடல் நோயினாலும், கடன்தொல்லையினாலும் சிக்குண்டு பல்வேறு நிலைகளில் அவதியுறுகின்றனர். அவர்களது உடல்நோயை நீக்கி, அவர்கள் எடுக்கும் முயற்சிகள் வேண்டுதல்கள் வெற்றியடைய புனித ஆரோக்கிய அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
4. நற்கருணை நாதரே எம் இறைவா, இன்றைய இளையோர்கள் புதிய கல்விக் கொள்கை, தொழிலில் மந்த நிலை, வேலையின்மை போன்ற காரணிகளால் பாதிப்புக்குள்ளாகாமல் நல்ல முறையில் கல்வி பயின்று, தங்களது குடும்பத்திற்கு வருவாய் ஈட்ட, நல்ல வழியைத் தேர்ந்துக்கொள்ள அருள்புரிய வேண்டுமென்று புனித ஆரோக்கிய அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 12.09.2019 புனித மரியாவின் திருப்பெயர் விழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

புனித மரியா பிறந்த எட்டாம் நாளுக்குப் பின் அவரின் பெற்றோர்களான புனித சுவக்கீனும், அன்னாளும் இறைவனால் உணர்த்தப்பட்டு "மரியா" என்ற பெயரைச் சூட்டினர். புனித மரியா இறைவனின் தாயாகக் கருதப்பட்டு மரியாதையும் பக்தியும் செலுத்தப்பட்டு வருகிறார். தந்தையாம் கடவுள் மரியாவுக்கு அருள் நிறைந்தவள் என்ற

சிறப்பு உரிமையைக் கொடுத்தபடியால், அன்னை இறைவனிடம் நமக்காகப் பரிந்துரைக்கும் சிறப்பினையும் இவ்விழா நமக்கு நினைவுறுத்துகின்றது. இவ்விழா 1513ல் 15, செப்டம்பர் அன்று ஸ்பெனியில் ஓர் உள்ளூர் விழாவாகக் கொண்டாடப்பட்டது. அதன் பிறகு 1589ல் திருத்தந்தை ஐந்தாம் சிக்ஸ்டஸ் இவ்விழாவினை செப்டம்பர் 17ம் நாளில் மாற்றினார். திருத்தந்தை பதினைந்தாம் ஜார்ஜ் மறைமாவட்ட விழாவாக மாற்றினார். 1963ல் போலந்து அரசர் ஜான் சோபியஸ்கி தன்னுடைய படைவீரர்களுடன் செல்லும்முன் தன்னுடைய வீரர்களைப் போரில் காக்கும்படி அன்னை மரியாவிடம் ஒப்படைத்துச் சென்றார். அதன்படி வெற்றியும் பெற்றார். 2002ல் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்களால் இவ்விழா செப்டம்பர் 12ம் தேதி சிறப்பிக்க மீண்டும் உரோமன் கத்தோலிக்க நாட்குறிப்பில் எழுதப்பட்டு இன்றும் சிறப்பிக்கப்பட்டு வருகிறது.

இன்று இவ்வுலகிலே அன்னை மரியாவின் பெயர் இல்லாத கத்தோலிக்க ஆலயங்களோ, மறைமாவட்டங்களோ, கல்விக்கூடங்களோ, மருத்துவமனைகளோ, கல்லூரிகளோ இல்லை என்று சொல்லலாம். புனித மரியாவின் திருநாள் மட்டுமே வருடம் முழுவதும் ஒவ்வொரு மாதமும் பல பெயர்களில் கொண்டாடப்படுகின்றது என்பது அன்னை மரியாவின் சிறப்பை மேலும் அதிகப்படுத்துகிறது, மீட்பின் துணை இரட்சகியாம் அவள் புகழைப் பாடுவோம். அன்னை மரியாளின் பரிந்துரையை நாடுவோம். திருப்பலியில் பங்கு கொள்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் திருஅவையிலுள்ள அனைத்து மக்களையும் புனிதப் பாதையில் நடத்திச் செல்லும் வல்லமையும், அருளையும் பெற்றிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நலம்தரும் நாயகனே இறைவா, மரியன்னையின் மாண்பினை உணராத, பிற மதத்தினரும், மரியன்னையை அறிந்த கத்தோலிக்கர்களும் அன்னை மரியாவின்மீது நம்பிக்கையும், பக்தியும் செலுத்தி, அன்னை வழியாக இறைவனை அடையும் வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அருளின் ஊற்றே இறைவா, அன்னை மரியாவிடம் செபிக்கும் நாங்கள் பாதுகாப்பும் இரக்கமும் வாழ்வில் அமைதியும் ஆறுதலும் பெற வேண்டுமென்றும், சிறப்பாக இன்றைய நாளில் கத்தோலிக்க சபைக்கும், கத்தோலிக்கர்களுக்கும் பிறரால் ஏற்படும் அவமானங்கள், இடஞ்சல்கள், மதப் போராட்டங்கள், மக்களின் அவலநிலைகள் மாற வேண்டுமென்றும் உம்மை மன்றாடுகிறோம்.

## 13.09.2019 புனித யோவான் கிறிசோஸ்தோம் திருப்பலி

### முன்னுரை

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

கிறிஸ்து இயேசுவில் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, இன்று திருஅவையானது புனித யோவான் கிறிசோஸ்தோம் என்பவரின் விழாவைக் கொண்டாட அன்புடன் அழைக்கிறது. இந்தப் புனிதர் 349ம் ஆண்டு அந்தியோக்கியாவில் பிறந்தார். "கிறிசோஸ்தோம்" என்றால், "பொன்வாய்" என்பது பொருள். இவர் சிறந்த மறையுரையாளர். இந்தப் புனிதர் சொற்பொழிவாளர்களின் பாதுகாவலர் என்று அழைக்கப்படுகிறார். புனித அந்தியோக்கியா நகர மெலிசியுஸ் கையால் 381ம் ஆண்டு திருத்தொண்டராகவும் 386ம் ஆண்டு இராஜிரியுஸ் கரங்களால் அருள்பணியாளராகவும் திருநிலைப் பெற்றார். கொன்ஸ்தாந்திநோபிள் பேராயராக 397ம் ஆண்டு இவர் நியமிக்கப்பட்டார்.

யோவான் பேராயராக வந்ததை விரும்பாத அலெக்சாந்திரியா நகர மறைத்தந்தை தியோஃபிலஸ் "இறையியல் வல்லுநர் ஓரிஜனுக்கு பேராயர் சலுகைக் காட்டுகிறார்" என்று குற்றம் சாட்டி இப்புனிதரை நாடு கடத்தினர். யோவானுக்கு ஆதரவாக மக்கள் கிளர்ச்சி செய்ததால் 403ம் ஆண்டு திரும்ப அழைத்து வரப்பட்டார். மீண்டுமாக இவர்மீது குற்றம் சாட்டி நாடு கடத்தினர். நீண்ட வழிப்பயணத்தில் இறந்து விடுவார் என்று எதிரிகள் நினைத்தார்கள். அந்த நாட்டில் மூன்று ஆண்டுகள் இருந்தபோது 250 கடிதங்கள் எழுதி விசுவாசிகளைத் திடப்படுத்தினார். நடந்த அனைத்தையும் விளக்கி திருத்தந்தை முதலாம் இன்னொசென்ட்டிற்குக் கடிதம் எழுதினார். "பேராயர் பொறுப்பு நீக்கப்பட்டது செல்லாது" என்று திருத்தந்தை அறிவித்தார். 407ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ம் தேதி புனிதர் இறந்தார். துன்பங்களைத் தாங்கக்கூடிய மனப்பக்குவத்தை புனிதர் வழியாக இறைவனிடம் மன்றாடி திருப்பலியில் பங்கேற்போம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. சாந்தமுள்ளோர் பேறுபெற்றோர் என்ற இயேசுவே, திருஅவையின் தலைவரான எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் தாழ்ச்சியையும் சாந்த குணத்தையும் கொண்டவர்களாக இப்புனிதரின் வழியில் நடக்க வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அமைதியின் அரசரே இறைவா, உலகிலுள்ள தலைவர்கள், ஆட்சியாளர்கள் தங்களுடைய பாதுகாப்பில் உள்ள மக்களை அமைதி வழியில் நடத்திச்செல்ல வேண்டுமென்றும், நாடுகளுக்கிடையே போர், கலவரம் ஏற்படாமல் ஒற்றுமையுடன் சகோதர அன்பில் நிலைத்திட வரமருள வேண்டுமென்றும் உம்மை மன்றாடுகிறோம்.

3. நீங்கள் அனைவரும் சகோதரர்கள் என்றவரே, மிகச்சிறியோராகிய என் சகோதரர், சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்யும் உதவிகள் எனக்கேச் செய்யப்பட்டதாகும் என்று சொன்ன உம் வார்த்தைகளை வாழ்வாக்கி, நாங்கள் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 14.09.2019 திருச்சிலுவையின் மாட்சி திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

கிறிஸ்து இயேசுவின் இனிய இறைகுலமே, இன்றைய தினம் நம் ஆண்டவரின் திருச்சிலுவையின் மகத்துவ நாளாகச் சிறப்பிக்கின்றோம். அக்காலத்தில் "சிலுவை அவமானத்தின் சின்னமாக" கருதப்பட்டது. ஆனால் இன்றோ, "திருச்சிலுவை" நமது தாராக மந்திரமாகவும், வெற்றியின் சிகரமாகவும் மதிக்கப்படுகிறது. ஏனெனில் நம் ஆண்டவர் நமது பாவங்களுக்காகவும், மீட்புக்காகவும் அதனை தன் கரங்களில் ஏந்தி, அதில் மரித்து "திருச்சிலுவை என்ற மாட்சிமையை ஏற்படுத்தி விட்டார். யூதர்கள் திருச்சிலுவையை மறைத்துவிட எண்ணி அதை மறைத்து விட்டார்கள்.

கான்ஸ்டான்டிநோபிளின் சக்கரவர்த்தியின் அன்னை புனித எலென் அம்மாள் 322ம் ஆண்டு எருசலேமில் திருச்சிலுவையைக் கண்டுபிடித்தார். அவ்வேளையில் பாரசீக மன்னன் பாலஸ்தீன் நாட்டின்மீது படையெடுத்து விலையுயர்ந்த செல்வங்களோடு இயேசுவின் திருச்சிலுவையையும் கவர்ந்து சென்றான். ஆனால் கான்ஸ்டான்டிநோபிளின் பேரரசர் "எரோக்ளியுஸ்" திரும்பவும் திருச்சிலுவையை மீட்டு விலையுயர்ந்த கற்களால் ஆடை ஆபரணங்களை அணிந்து கல்வாரி சென்று இயேசுவின் திருக்கல்லறையில் திருச்சிலுவையைப் பதிக்க முயன்றும் அவரால் கல்வாரிக்குள் நுழையவே முடியவில்லை. அரசரின் நிலைக்கண்டு எருசலேமின் ஆயரான சக்கரியாஸ் அவரிடம் கூறியது:

"இயேசு சிலுவையைச் சுமந்து சென்றபோது இவ்வாறு ஆடை, ஆபரணங்களை அணியவில்லையே" என்றார். உடன் அரசர் எல்லாவற்றையும் களைந்து எளிய தவ உடைகளை அணிந்துச்சென்று கல்வாரியில் திருச்சிலுவையைப் பதித்தார். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பாலைநிலத்தில் மோயீசனால் உயர்த்தப்பட்ட வெண்கல பாம்பை உற்றுநோக்கியவர் அனைவரும் வாழ்வு பெற்றதுபோல, சிலுவையில் அறையுண்ட இயேசு கிறிஸ்துவை உற்றுநோக்கி அவரில் நம்பிக்கை கொள்ளும் யாவரும் வாழ்வு பெறுவர். சிலுவையை அன்பின் அடையாளமாகவும், மன்னிப்பின், தியாகத்தின், மீட்பின் அடையாளமாகவும் உருவாகியது கிறிஸ்துவின் அன்பே ஆகும். இயேசுவை உலகிற்கு எடுத்துக் காட்டிய திருச்சிலுவையை மாட்சிப்படுத்துவோம். பக்திப் பரவசத்துடன் ஆராதிப்போம், இத்திருப்பலியில் பக்தியோடு இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பினாலே எங்களை ஆளவந்த தேவனே, உம்மால் உருவாக்கப்பட்ட திருஅவையின் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், திருநிலையினர் அனைவரும் உம் அன்பின் ஆழத்தை நன்கு உணர்ந்தவர்களாய், பிறரன்புப் பணியே சிறந்தப்பணி என்பதை உணர்ந்து சேவை மனப்பான்மையுடன் வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. உன்னதரான இறைவா, உலக மக்கள் அனைவரும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் முன்மாதிரியான வாழ்க்கையைப் பின்பற்றி திருஅவையை நேசிக்கவும், மகிமைப்படுத்தவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. பாதுகாக்கும் தந்தையே இறைவா, பல இன்னல்களுக்கு இடையில் கல்விகற்று முடித்து வேலையில்லாமல் அவதியுறும் எங்கள் இளைய தலைமுறையினருக்குத் தகுந்த வேலை கிடைக்குமாறு செய்து அவர்களின் மனச்சோர்வை நீக்கி புதுவாழ்வு அளித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 15.09.2019 பொதுக்காலம் 24ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

I. விப 32: 7-11,13-14 II. 1திமொ 1: 12-17 லூக். 15: 1-32

இரக்கமுள்ள இறைவனின் மக்களே, நம் தாய் திருஅவையானது இன்று நம்மை பொதுக்காலம் 24ம் ஞாயிறைச் சிறப்பிக்க அழைப்பு விடுக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் தன்னை மறந்த மக்களைத் தண்டிக்கப்போவதாகக் கூறும் இறைவனிடம், மோசே தாழ்ச்சியோடு பரிந்துபேசி மன்னிப்பு வேண்டுவதால் ஆண்டவர் மனமிரங்கி, அவர்கள்மேல் இரக்கம் காட்டுவதைப் பற்றி வாசிக்கின்றோம். இரண்டாம் வாசகத்தில் "முன்னர் நான் அவரை பழித்துரைத்தேன், துன்புறுத்தினேன், இழிவுப்படுத்தினேன் நான் நம்பிக்கை கொண்டிராத நிலையால் அவ்வாறு நடந்ததால் அவர் எனக்கு இரங்கினார், மன்னித்தார் ஏற்றுக்கொண்டார்" என்று பவுல் கூறுகிறார்.

இன்றைய நற்செய்தியில் காணாமல் போனதைக் கண்டெடுக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியைவிட பன்மடங்கு மகிழ்ச்சி விண்ணகத்தில் ஒரு பாவி மனந்திரும்பி வரும்போது ஏற்படுகிறது. காணாமல் போன பணத்தை இரவு பகலாக தேடுவதுபோல் கடவுளும் பாவத்தால் அழியும் நம்மை மீட்கத் தேடி ஓடி வருகிறார் என வாசிக்கிறோம். நாம் நமது சிற்றின்ப ஆசைகளில் மூழ்கி உலக மாயையில் சிக்கி பேரின்ப வாழ்வை இழக்கின்றோம். நாம் எந்த நிலையில் இருந்தாலும் நம்மை வெறுக்காத கடவுள் அப்படியே நம்மை ஏற்றுக்கொள்கிறார். மனந்திரும்பி

வந்த மகனை எப்படி தந்தை ஏற்றுக்கொண்டாரோ அதைவிட அதிக பாசத்தோடும் இரக்கத்தோடும் கடவுள் நம்மை ஏற்றுக்கொள்வார். எனவே இத்திருப்பலியில் உலக ஆசைகள் அனைத்தும் விட்டுவிட்டு நிலைவாழ்வை அடையும் வழியை நமக்கருளும்படி எல்லாம் வல்ல இறைவனிடம் இப்பலியின் வழியாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, உம்மால் அழைக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் எல்லோரும் தங்களை நாடி வரும் மக்களை அன்புடன் ஏற்று, அவர்களுக்கு வேண்டிய நல்ல வழியைக் காட்டி தியாக உள்ளத்துடன் உதவிட அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.

2. எல்லாம் வல்ல இறைவா, எங்கள் பாரத நாட்டையாளும் தலைவர்கள் தங்களின் ஆட்சிக்குக் கீழுள்ள மக்களின் ஏழ்மையைக் கண்ணோக்கி அவர்களது வாழ்வாதார நிலை உயர நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி, வறுமையை நீக்கி நல்லாட்சி புரிய அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கமே உருவான இறைவா, எம் பங்கில் துன்பப்படும் ஏழை மக்களின் குறைகளை போக்கவும் துயர் துடைக்கவும் எங்களால் ஆன எல்லா முயற்சிகளையும் செய்து, தாராள உள்ளத்துடன் பொருளுதவி செய்ய எமக்கு நல்ல மனதிடத்தினைத் தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.

4. வழிநடத்தும் தலைவனே இறைவா, எம் இளையோர், இளம் பெண்களை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்களின் வாழ்வில் உம்மையே முன்னிறுத்தி கடின உழைப்புடனும், பொறுப்புடனும் முன்னேறும் நம்பிக்கையை எம் இளையோருக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 21.09.2019 புனித மத்தேயு திருப்பலி

**முன்னுரை** திருமதி ராணிவில்சன்

இறை இயேசுவில் அன்புக்குரிய இறைமக்களே இன்று புனித மத்தேயுவின் திருவிழாவை கொண்டாடுகின்றோம். ஏரோது மன்னன் அன்டிபசுக்காக சுங்கவரி திரட்டும் பணியில் இருந்தபோது இறை இயேசு மத்தேயுவை அழைத்தார். அழைப்பின் மேன்மையை நொடிப்பொழுதில் உணர்ந்ததால் நன்றி பெருக்கோடு பெரிய விருந்து வைத்தார். மத்தேயு என்ற சொல்லுக்கு "யாவேயின் அருங்கொடை" என்பது பொருள். இறை இயேசுவின் வாழ்வில் தான் கண்டவை, கேட்டவை, மற்ற திருத்தூதர்கள் போதித்தவைகளை வரலாறாக எழுதுகிறார். புனித மத்தேயுவின் நோக்கம் மனம் மாறியவர்கள் தாங்கள் பெற்றக் கொடையில், நம்பிக்கையில், நிலைக்க வேண்டும். பழைய நிலைக்கு திரும்பி விடக்கூடாது. யாவரும் பெற்றதை

இழந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார், செயல்படுத்தினார். மத்தேயு தனது நற்செய்தியில் "இறை இயேசு இறைவாக்கினர்களால் அறிவிக்கப்பட்ட அனைத்தையும் நிறைவேற்றினார்" என்பதை புரிய வைக்கிறார். யூத குலத்தினர் தங்களது பாறை போன்ற கடின உள்ளத்தாலும் அவநம்பிக்கையாலும் மெசியாவைப் புறக்கணித்தனர்.

எனவே இறை இயேசுவின் அரசு அனைவருக்கும் நற்கனிகள்தரும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். ஆகவே புனித மத்தேயுவின் திருநூல் இறையரசின் நற்செய்தி என அழைக்கப்படுகிறது. திருமுழுக்கால் அழைக்கப்பட்ட நாம் புனித மத்தேயுவைப் போன்று உலகச் செல்வங்களை விடுத்து இறையேசுவைப் பின் தொடர்ந்து அழியா செல்வம் நமக்குண்டு என்பதனை உணர்ந்து பிறரின் மனந்திரும்புதலுக்குக் காரணமாக விளங்கச் செயல்படுவோம். ஒருவரை ஒருவர் வாழ்த்துவோம் இணைந்து மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, திருஅவையின் வழிகாட்டிகள் அனைவரும் பெற்ற அழைப்பிற்கு ஏற்ப இறை இயேசுவைப் பின் தொடர்ந்து உலக மக்கள் அனைவரையும் மனமாற்றத்திற்கு அழைத்து வரத் தேவையான வரங்களைக் கொடுத்து ஆசீர்வதிக்க வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.
2. திருமுழுக்கின் வழியாக எமைத் தேர்ந்தெடுத்த இறைவா, இறை இயேசு சொன்ன அனைத்தையும் கட்டளையாக ஏற்று புனித மத்தேயு செயல்பட்டதுபோல அவரது விழாவைக் கொண்டாடும் நாங்கள் அனைவரும் உமது வார்த்தையை எங்கள் வாழ்வில் செயல்படுத்த தூய ஆவியாரின் ஆற்றலையும் வல்லமையையும் தந்து காத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. அழைக்கும் இறைவா, எம் குடும்பங்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். உமது அழைப்பை ஏற்று புனித மத்தேயு மனமுவந்து வந்ததுபோல, எம் பிள்ளைகளும் உமது அழைப்பை உணர்ந்து உம் பணிசெய்ய அவர்களுக்குத் தாராள மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 22.09.2019 பொதுக்காலம் 25ம் ஞாயிறு — திருப்பலி

**முன்னுரை**

திரு. செபாஸ்டின்

I. ஆமோ 8: 4-7 II. 1திமொ 2: 1-8 லூக் 16: 1-13

ஆண்டவரில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட சகோதர சகோதரிகளே, இன்றைய இறைவார்த்தை நீதியும், நேர்மையும் கொண்டு வாழ நம்மை அழைக்கின்றது. ஒருவன் நல்லவனாக வாழ்வதும் தீயவனாக மாறுவதும் வளர்வதும் அவன் வளருகின்ற சூழ்நிலையைப் பொறுத்ததே. இன்றைய முதல் வாசகம் நீதியற்ற சமூகச் சூழலை அப்பட்டமாக

படம் பிடித்துக் காட்டுகிறது. இன்றைய நற்செய்தியில் நீதியற்ற கண்காணிப்பாளரின் இரண்டு வகையான முரண்பட்ட குணங்களைப் பார்க்கின்றோம். 1. தன் கண்காணிப்பு வேலையில் நேர்மையற்றவனாக இருந்தான் எனவே தண்டிக்கப்பட்டான். 2. தலைவனுடைய செல்வத்தைக் கொண்டு நீதியுடன் செயல்பட்டான் தன் தலைவனின் செல்வத்தைத் தனக்காக எடுத்துக் கொள்ளாமல் கடன்காரர்களுக்குக் கொடுத்தான். எனவே அவன் பாராட்டப்பட்டான் மேலோட்டமாகப் பார்த்தால் இன்றைய நற்செய்தி புதிரான, குழப்பமான ஒன்றாக இருக்கிறது. ஆழமாக உள்ளே சென்று பார்த்தால் நீதியையும், நேர்மையையும் பற்றித் தெளிவாகக் கூறுவதைக் காணலாம்.

நேர்மையற்ற கண்காணிப்பாளர் இருளின் மக்களாகவே சித்தரிக்கப்படுகிறார். ஒளியின் மக்களாகிய நாம் நீதியையும் நேர்மையையும் இரு கண்களாகப் பாவிக்க வேண்டும். இறைவனுக்கு மட்டுமே ஊழியம் புரிபவர்களாக இருக்க வேண்டும். நேர்மையோடு நடப்பவனுக்கு இறைவன் தரும் மீட்பைக் காட்டுவேன் என்ற திருப்பாடல் வரிகள் நிஜமாகின்றன. நாம் வாழவேண்டிய நெறிமுறைகளை இன்றைய இரண்டாம் வாசகம் சொல்கிறது. இறைப்பற்றும், கண்ணியமும் கொண்டு, அனைவரின் மீட்புக்காகச் செபத்துடன் கூடிய வேண்டல்களுடனும் நீதி நேர்மையோடும் நடந்து ஒளியின் மக்களாக வாழ வரம்வேண்டி இப்பலியில் உருக்கமுடன் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஒளியாம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் இரு தலைவர்களுக்கு ஊழியம் புரிய முடியாது என்ற உவமையை உள்வாங்கி உம்மையே சார்ந்த நிலைப்பாட்டுடன் தொடர்ந்து ஒளிவீச உம் ஆவியாரைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நீதியின் தேவனே, எம் நாட்டையாளும் தலைவர்களும், ஆட்சியாளர்களும், பணத்திற்கும், அதிகாரத்திற்கும், புகழுக்கும் அடிமையாகி விடாமல் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை நீதியுடனும் நேர்மையுடனும் நடத்திச்செல்ல கடமைப்பட்டுள்ளதை உணர்ந்து செயல்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. மீட்பளிக்கும் இறைவா, தீமையின் பிடியில் சிக்கித் தவிப்போர் நோய் நொடியில், பாவ பழக்க வழக்கங்களில் அடிமையானோர் உம்மைத் தேடாதோர், உம்மை வெறுப்போர், உம் வழிகளை அறியாதோர் அனைவரும் நீர் அருளும் மீட்பின் வழிகளைக் கண்டுகொள்ள உம் ஆவியைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
4. வழிநடத்தும் இறைவா, உம்முன் கூடி செபிக்கும் எங்கள் வாழ்வு இறைப்பற்றிலும் கண்ணியத்திலும் நிறைந்து நீதியின் கதிரவன்போல் ஒளிவீசவும், அவ்வாழ்வின் வழியாய் உமக்குச் சான்று பகரவும் அருள்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 24.09.2019 அலங்கார உபகார மாதா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

"மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கேச் செய்தீர்கள்" மத் 25: 40

பிறர்நலம் பேணும் சகோதர சகோதரிகளே, இன்று நமது தாயாம் திருஅவை, உபகார மாதா திருவிழாவைக் கொண்டாடி மகிழ நம்மை அழைக்கிறது. இறைவன் மரியாவுக்குத் தந்த உயர்வும் சிறப்பும் தம்மைப் பிறரிடமிருந்து தனிமைப்படுத்தி உயர்த்துவதற்காக அன்று. மாறாக, அது பிறரது உயர்வுக்காகவும், வளர்ச்சிக்காகவும், தாம் தொண்டு செய்வதற்கே எனும் உணர்வும் உறுதிப்பாடும் அவரிடம் இருந்தன. இதனால்தான் இறைவனையே உதரத்தில் சுமந்திடும் இணையற்ற பேற்றையும் பெருமையையும் அடைந்திருந்தாலும், முதிர்வயதில் கருவுற்று ஆறாம் மாதத்தில் இருந்த உறவினர் எலிசபெத்துக்கு உதவிட மரியாள் மலை நாட்டுக்கு விரைந்து செல்கிறார். பிறரது தேவையை உணர்ந்து எந்தவிதத் தயக்கமுமின்றி உதவிட விரையும் மரியாவின் பண்பைக் கானாவூர் திருமண நிகழ்விலும் நாம் தெள்ளத் தெளிவாகக் காண்கின்றோம். தம்மையே தாம் உயர்த்திக்கொள்வதல்ல உண்மையான உயர்வு, மாறாக ஏழை எளியவர் உயர உதவுவதன் வழியாக இறைவனால் தாம் உயர்த்தப்படுவதே உண்மையான சிறப்பு என மரியா உணர்ந்திருந்தார். கானாவூர் திருமண விருந்தின்போது ஏற்பட்ட குறையை அக்கறையோடு முன் வந்து தன் மகன் இயேசுவிடம் பரிந்துரைத்து முதல் அருளடையாளத்தை ஆற்றச்செய்து அக்குறையைப் போக்குகிறார்.

அடுத்தவர் பிரச்சனையையும் தமது பிரச்சனையாகக் கருதும் மனிதநேய உணர்வு மரியாவிடம் மேலோங்கி நின்றது. துன்பத்தில், துயரத்தில், வறுமையில், நோயில், முதுமையில், தனிமையில் இருப்போரின் நிலை உணர்ந்து பரிவுகொண்டு தாமே முன்வந்து அவர்களைத் தேடிச்சென்று உதவும் தெய்வீக மனநிலை அது. மனுக்குலத்தைப் பாவத்திலிருந்து மீட்க, தம்மகனைப் பலியாகக் கொடுக்கத் துணிகிறார். "ஒருவாள் உமது உள்ளத்தை ஊடுருவும்" லூக் 2: 35 எனும் சிமியோனின் இறைவாக்கைக் கேட்டிருந்தும் தயக்கமோ, தடுமாற்றமோ இன்றி மக்களின் மீட்புப் பணிக்குத் தம்மகன் இயேசுவை அர்ப்பணித்து, சிலுவைவரை மரியாவும் அவர் பணியில் பங்கேற்கிறார். மரியாவின் தெய்வீக மனநிலையில் நாமும் பிறர்நலம் கொண்டு வாழ உறுதி அளித்து, பக்தியுடன் இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் நாயகனே இறைவா, எம் தாயாம் கத்தோலிக்கத் திருஅவையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் கூறிய வாழ்வில் அமைதி நிலவும் நேரங்களைவிட துன்ப நேரங்களில் எம் ஒரே

நம்பிக்கையான இயேசுவோடு ஒன்றித்திருக்க கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினருக்கு உறுதியளித்திடும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. சாட்சிய வாழ்வுக்குரிய முன்மாதிரிகையே எம் இறைவா, பிறருக்கு உதவி புரிய எப்போதும் தயாராக இருப்பதே ஒரு சாட்சிய வாழ்வுதான் எனத் திருத்தந்தை குறிப்பிட்டதற்கேற்ப நாட்டை ஆள்வோர், சமூக ஆர்வலர்கள், தொண்டாற்றுபவர்கள் அனைவரும் தாம் தேர்ந்துக்கொண்ட துறைகளுக்கேற்ப கடமையுணர்வோடும், சகோதரத்தன்மையோடும் சேவைசெய்வதற்கான வரங்களை அருளவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அமைதியின் தெய்வமே இறைவா, எம் நாவுகள் மற்றும் கரங்களிலிருந்து வன்முறையை அகற்றியருளும். எம்மை எப்போதும் ஒன்றிணைக்கும் "உடன்பிறப்பு" என்ற சொல் உறுதுணையாக இருக்கவும் எம் வாழ்வு எப்போதும் அமைதியின் பாதையாக இருக்கவும் எம் இதயத்தையும் மனதையும் புதுப்பித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 27.09.2019 புனித வின்செனட் தே பால் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

அன்பு இறைமக்களே, பிரான்சிஸ் காஸ்கனி நகரில் பிறந்த புனித வின்செனட் தே பால், பிரான்சீஸ்கன் குருக்களின் உதவியால் கல்விகற்று குருவானவர் ஆனார். குருத்துவத்திற்குப்பின் பாரிஸில் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். தந்தை பெருய்ல் என்பவரின் நட்பினால் இவரது ஆன்மீகம் ஆழமடைந்தது. 40 வயதில் முற்றிலும் இறைவனுடன் ஒன்றியவராக வாழத் தொடங்கினார். இவர் முகமதியன் ஒருவனால் ஆப்ரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கே அடிமைச் சந்தையில் இவர் ஆற்றிய பணிகளின் அனுபவம் இவருக்குக் கை கொடுத்து உதவியது. டிகோண்டி குடும்பத்தினரின் விருப்பப்படி அவர்கள் அளித்த நிலம், மானியம் இவைகளைப் பெற்றுக்கொண்டு ஏழைகளுக்கு உதவ முன்வந்தார். "வின்செனசியன்" என்ற துறவறச் சபையை உருவாக்கினார். இவருடைய சபைத் துறவிகள் ஏழைகள் மற்றும் ஆதரவற்றோரைப் பேணுவதற்காகவே தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று சபை ஒழுங்குகளை அமைத்தார். இந்த வியத்தகுப் பணிகளைப் பார்த்த லூயி தெ மரியாக் என்பவரின் தாராளமான பொருளுதவியுடன் பெண்களுக்கும் ஒரு துறவறச் சபையைத் தோற்றுவித்தார். "பிறரன்பு சகோதரிகள்" என்று இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

இவற்றோடு நின்றுவிடாமல் 3ம் சபை ஒன்றையும் அவர் காலத்தில் தொடங்கினார். இந்தச் சபையினர் ஆழ்ந்த தியாக உணர்வுடன் ஏழை எளியோரின் கண்ணீரை இயேசுவின் பெயரால் துடைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், அன்றுபோல் இன்றும் திருஅவையின் எல்லாப் பகுதிகளிலும்

அன்பையும் இரக்கத்தையும் பரப்புகின்றனர். அன்பே இவரது பிரதான புண்ணியம், ஏழைகளுக்கு உதவி செய்யும்படி செல்வ சீமாட்டிகளிடம் சமூக உணர்வைத் தூண்டினர். அவர்களிடம் பெற்ற உதவியால் மருத்துவமனையை அமைத்துக் கொடுத்தார். பெண்களை இழிவுபடுத்தும் இராணுவத்திடமிருந்து மீட்டு கன்னியர்களின் இருப்பிடங்களில் உறைவிடம் பெற்றுத்தந்தார். விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த நிலங்களையும் விதைகளையும் மற்றும் தேவையானவைகளையும் தந்தார். ஆப்பிரிக்காவில் அடிமைகளாயிருந்த கிறிஸ்தவர்களுக்கு ஆன்மீக உதவி செய்து, தன்னுடைய சபைக் குருக்கள், கன்னியர்கள் வழியாக அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டார். எங்கெல்லாம் இவரது தியாகத்தொண்டு தேவைப்பட்டதோ அங்கெல்லாம் முழுமையாக தன்னை அர்ப்பணித்தார். இப்புனிதரைப்போல ஏழைகளை அன்பு செய்யும் தியாக மனப்பான்மைப் பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும், எங்களின் ஞான மேய்ப்பர்களான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் போன்றவர்களுக்கு எங்களால் ஆன உதவிகள் செய்யவும், இவர்களைச் செபத்தில் தாங்கி நிற்கவும் வேண்டிய நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கத்தின் நிறைவே இறைவா, உமது மனப்பான்மையை எமதாக்கிக் கொண்டு ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர், விதவைகள், தனிமையில் வாடுவோர், வாழ்வாதாரத்தை இழந்தவர்கள் போன்றவர்களிடம் இரக்கமும், கருணையும் காட்டும் மனப்பக்குவம் உள்ளவர்களாக வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. ஒளியே உருவான இறைவா, பிறர் துன்பம் துடைப்பதில் பங்கெடுக்கும் புனித வின்சென்ட் தே சபை குருக்களும், கன்னியர்களும் ஆன்ம பலமும், உடல் நலமும் பெறவும், தாங்கள் மேற்கொள்ளும் பணிகளை மென்மேலும் சிறப்பாகச் செய்யும் ஆற்றலும் மனஉறுதியும் பெறவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 29.09.2019 பொதுக்காலம் 26ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. ஆமோ 6: 1. 4-7 II. 1திமொ 6: 11-16 லூக் 16: 19-31

இறைவனின் அன்பில் வாழும் இனிய மக்களே, இன்று பொதுக்காலம் 26ம் ஞாயிற்றுக்கிழமை. இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் ஆமோஸ் நமக்கு நம் வாழ்வைப் பற்றி எச்சரிக்கை விடுகிறார். செல்வ செழிப்பில், பஞ்சனையில் சாய்ந்து, சொகுசில் திளைத்து, திராட்சை ரசம் குடித்து, கொழுத்த உணவுகளை உண்டு இன்ப களியாட்டங்களில் மிதந்து வாழும் இவர்களுக்கு ஐயோக் கேடு என்கிறார்.இரண்டாம் வாசகத்திலும்

புனித பவுல் பொருள் ஆசையிலிருந்து விடுபட்டு, இறைப்பற்று, நம்பிக்கை, மனஉறுதி, பணிவு இவற்றில் ஊன்றி விசுவாச வாழ்விலும், நிலைவாழ்விலும் நிலைத்திருக்கவே நாம் அழைக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார். ஆண்டவரின் கட்டளையை அப்பழுக்கின்றி கடைப்பிடித்து, எக்குறையுமின்றி விசுவாச வாழ்வில் நிலைக்கும்போது, சாவை அறியாத, அணுக முடியாத ஒளியில் வாழ்பவரை அரசருக்கெல்லாம் அரசரானவரை மாண்பும் ஆற்றலும் உரித்தானவரைக் காணச் செய்வார் என்றே கூறுகிறார்.

நற்செய்தியாளர் புனித லூக்காவும், ஏழை லாசர் இறைவனின் மடியிலும் மகிழ்வதையும் அவருக்கு இரக்கம் காட்டாத செல்வந்தர் நரகத்தின் தீப்பிழம்பில் வேதனைப்படுவதையும் சுட்டிக்காட்டி இரக்கம் இல்லாதவர்க்கு இறைமுன்னிலையில் இடம் இல்லை என்கிறார். நாம் வாழும் சமூகத்தில், வீதியோரங்களிலும், வெயிலிலும், மழையிலும் வேதனையுறும் ஏழை மக்களைக் கண்டு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்யாமல் செல்லும் செயலை விடுத்து துன்பப்படுவோரின் துயர் துடைக்க நம் கரங்களை நீட்டுவோம் என்ற உறுதியோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையை வழிநடத்தும் இறைவா, உம்மால் நியமிக்கப்பட்ட திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார், திருநிலையினர் அனைவரும் தங்கள் தகுதியுணர்ந்து திருஅவையின் கட்டளைகளுக்கு மதிப்பளித்து உண்மையுடனும், நேர்மையுடனும் தங்கள் பணிகளைச் செயல்படுத்த மனவுறுதியை அளிக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. நல்ல ஞானத்தை வழங்கும் இறைவா, நிலையில்லா உலகில் நிம்மதி தேடி உல்லாச வாழ்க்கையில் வீழ்ந்து மதிமயங்கி அலையும் நெஞ்சங்களை உம்பதம் சமர்ப்பிக்கிறோம். நிலையான உமது அன்பு ஒன்றே எம்மை நிலைப்படுத்தும் என்பதை அவர்கள் உணரும் உள்ளத்தை அளிக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கத்தின் இறைவா, சாலையோரங்களிலும், மருத்துவமனைகளிலும் கவனிப்பாரன்றி மனவேதனையுறும் மக்களுக்கு உதவ வசதி படைத்த செல்வந்தர்களுக்கு நல்மனதைத் தரும்படியாகவும், அதற்கான வழிவகைகளை திட்டங்களை அவர்தம் மனதில் உருவாக்கிடவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. பாதுகாப்பின் இறைவா, பரபரப்பான இவ்வுலக வாழ்வில், குடும்பங்களில் வயதானவர்களையும், திருமணம் ஆகாத பெண்களையும், கணவனால் கைவிடப்பட்ட இளம் பெண்களையும், விதவைத் தாய்மார்களையும் உம் பதம் சமர்ப்பிக்கின்றோம். அவசியமான காலங்களில் அவர்களுக்கு ஆறுதல் தந்து தேவைகளை நீர்தாமே நிறைவேற்ற உம்மை மன்றாடுகிறோம்.

## 30.09.2019 புனித ஜெரோம் விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் புனித ஜெரோம் அவர்களின் விழாவைக் கொண்டாடுகின்றோம். "விவிலியத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன்" என்று சொல்லி, எல்லா மக்களினமும் எளிதில் புரிந்து கொள்ளும் நோக்கத்தில் விவிலியத்தை மொழி பெயர்த்த மாபெரும் புனிதர் இந்த புனித ஜெரோம். ஏறக்குறைய 341ம் ஆண்டில் டால்மேஷியா என்ற இடத்தில் பிறந்தவர் தற்போது இது யூகோஸ்லாவியாவில் இருக்கிறது. 366ம் ஆண்டில் திருமுழுக்கு பெற்றவர், பின்னாளில் 377ல் அந்தியோக்கியாவின் தென்மேற்கில் இருக்கும் சால்சிஸ் பாலைவனத்தில் இரண்டு ஆண்டுகள் துறவியாக வாழ்ந்தவர், அங்கேயே குருத்துவ அருட்பொழி பெற்றவர். விவிலியம், மறையுரைகள் மற்றும் யுசேபியுஸின் படைப்புகளை மொழி பெயர்த்தார். 386களில் கத்தோலிக்க மறையின் கோட்பாடுகள் தாக்கப்பட்டபோது அதனைக் கண்டித்து, எதிர்த்து பல நூல்களும் எழுதினார். கிரேக்கம், எபிரேயம் மொழிகளில் இருந்த திருமறை நூல்களை மக்களுக்குப் புரியும் வகையில் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார்.

கல்தேய மொழியைக் கற்று அம்மொழியில் எழுதப்பட்ட தோபித்து, தானியேல் நூல்களை மொழிபெயர்த்தார். பழைய ஏற்பாட்டின் சாலமோனின் ஞானம், சபை உரையாளர், பாரூக், 1 மற்றும் 2 மக்கபேயர் ஆகியவை தவிர மற்ற 41 நூல்களையும் 18 ஆண்டுகளில் இலத்தீனில் மொழிபெயர்த்தார். செப்டம்பர் 30, 420ல் மறைந்த இப்புனிதர், இன்று விவிலிய அறிஞர்கள், நூலகங்கள், நூலகப் பணியாளர்கள், பள்ளிக் குழந்தைகள், மாணவர்கள் ஆகியோருக்கு மட்டுமன்று மொழி பெயர்ப்பாளர்களுக்கும் பாதுகாவலர் என திருஅவையால் அறிவிக்கப்பட்டவர். இவரது நற்செய்தி அறிவிப்புப் பணியில் பங்குகொண்டு நாமும் ஏதாவது ஒரு வழியில் நற்செய்தி அறிவிக்கும் கருவியாக வாழ்வதற்குத் தேவையான வரத்திற்காகத் தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம். நம்பிக்கையோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் திருஉருவாம் இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளுக்காக மன்றாடுகிறோம். நற்செய்சியின் ஒளியில் அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மக்களையும் அவ்வொளிக்கு அழைத்துச் செல்ல வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. நம்பிக்கையின் ஆழத்தைக் காட்டிய இறைவா, எதிர்பாரா நிகழ்வுகளைத் தாங்கும் உறுதியான நெஞ்சம் கொண்டிருக்கவும்,

அத்தகைய சூழலில் உணர்ச்சிகளுக்கு இடமளிக்காது கடவுளின்மீது அசைக்க முடியா நம்பிக்கைக் கொண்ட இயேசுவைப் போல அவரின் மனநிலையோடு எமது வாழ்வை அணுகத் தேவையான ஆற்றலால் எங்களை நிரப்பியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இறைவனை நம்பி நாம் செய்கிற எந்தவொரு செயலும் பொய்த்துப் போவதில்லை. அது எப்போதும் நமக்கு வெற்றியே என்பதை உணர்ந்து, எங்களது நம்பிக்கையை ஆழப்படுத்த வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

# பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

## அருள்மிகப் பெற்றவளே வாழ்க...

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

நம் வாழ்வில் ஒவ்வொரு நாளும் பல நண்பர்களையும், உறவினர்களையும் சந்திக்கின்றோம். அப்படி சந்திக்கும்போதும், பிறந்த நாள், மணவிழா போன்ற கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளும்போதும், "வாழ்க, வளமுடன் வாழ்க", "வளமுடன் நலமுடன் வாழ்க" என்பன போன்ற வார்த்தைகளால் அவர்களை வாழ்த்துகிறோம். அதுபோல நல்லவர்களையும், ஊருக்கும், உலகுக்கும் அரும்பணியாற்றிய சான்றோர்கள், தியாகிகள், தலைவர்களையும், "வாழ்க" என போற்றுகிறோம், வாழ்த்துகிறோம். சக மனிதர்களை வாழ்த்துவது போலல்லாமல், மிகவும் மேலான விதத்தில் கடவுளை நாம் வாழ்த்துகிறோம். அவரை வாழ்த்துவதால் நாம் வாழ்கிறோம், வளருகிறோம். அவரைப்போலவே நாமும் நல்லதையேச் செய்வதற்கான ஆற்றல் பெறுகின்றோம். நமது வாழ்த்துதலை அவர் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் அவர் நம்மை நாளும் வாழ்த்துகிறார். ஏனெனில் அவர் வாழும் கடவுள், வாழ்விக்கும் கடவுள். "தோன்றுக" என்று கூறி, அவர் அனைத்து உலகையும், உயிர்களையும் படைத்தார். இறுதியாக அவர் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான் (தொநூ 2: 7). இவை "வாழ்க" எனக்கூறி வாழவைக்கும் கடவுளின் செயல்களே. இங்கும் "இதோ கன்னிப்பெண் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள், அவன் எம்மானுவேல் என்னும் பெயர் பெறுவான்" என்ற எசாயாவின் இறைவாக்கு நிறைவேறும்படியாய், கடவுள்தாமே தம் வானதூதர் வழியாய் சாதாரண ஓர் ஏழைப்பெண் மரியாவுக்கு "அருள்மிகப் பெற்றவளே, வாழ்க" (லூக் 1: 28) என்ற வாழ்த்துச் செய்தியைச் சொல்கிறார்.

மரியாள் உண்மையில் ஒரு ஏழைப்பெண்தான் என்பதை விவிலியம் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. "தாழ்நிலையில்" என அவர் தம்மைக் குறிப்பிடுவதும், அவருக்கும் யோசேப்புக்கும் பெத்லேகேமிலோ, விடுதிகளிலோ இடம் கிடைக்காததும் (லூக் 2: 7), அவர்கள் எருசலேம் கோவிலுக்குச் சென்று குழந்தை இயேசுவை ஆண்டவருக்கு

அர்ப்பணித்தபோது ஏழைகளின் காணிக்கையான இரு மாடப்புறாக்களைக் கொடுத்ததும் (லூக் 2: 24) சிறந்தச் சான்றுகளாகின்றன. இந்த ஏழைப் பெண்மணிதான் மனுக்குலம் மீட்படைய ஒரு கருவியாக இறைவனின் கரத்தில் செயல்பட இன்றியமையாதவளாய் அழைக்கப்பட்டாள். இறைவனால் முன் குறிப்பிடப்பட்டவரும், மனுக்குலம் அனைத்திற்காகவும் அழைக்கப்பட்டவரும் அவரே. இறைவனுக்குத் தாயாக வேண்டிய மரியாளை, அவள் கருவில் உருவாகும்போதே பாவத்திலிருந்து இறைவன் மீட்டார். அற்பப் பாவத்திற்கும், சாவானப் பாவத்திற்கும் ஆளாகாது, அவளின் கன்னிமைக்கும் பழுதின்றி பராமரித்தார் ஆண்டவர். ஆண்டவரை எந்நேரமும் உணர்ந்திடும், தன் உதரத்தில் அவரைச் சுமந்திடும் பாக்கியம் பெற்றாள். இவ்வுலகில் வாழும் மக்களின் அவலங்களைப் பாவங்களைப் போக்கும் இறைமகனைப் பெற்றெடுக்கும் கருவியானாள்.

அதோ அவள் வாழ்த்துப் பெறுகிறாள். "அருள்மிகப் பெற்றவளே" என்ற அந்த வாழ்த்துதலுக்கு அவள் தகுதியானவளே. "ஏவாள் நமக்கு மரணம் கொண்டு வந்தாள். மரியாள் வாழ்வு தந்தாள்" என்று மரியாளை ஏவாளிடமிருந்து உயர்த்திக் காட்டுகிறார் புனித எபிரேம், புனித புரூனோவும், "ஏவாளைத் தொடர்ந்து இருளும், இடர்பாடும், மரணமும் வந்தன. மரியாளைத் தொடர்ந்து அருளும், ஒளியும், அன்பும், வாழ்வும் வந்தன. மேலும் ஏவாள் அலகையினால் ஆட்கொள்ளப்பட்டாள். மாறாக அலகையை ஆட்டிப்படைத்தவள் கன்னிமரியாள்" என்று மரியாளின் அருளைப் புகழ்ந்து பாடுகிறார். இப்படி "அருள்மிகப் பெற்றவளே வாழ்க" என்று கடவுளால் வாழ்த்து பெற்ற அவளை, இறைவன் தம் பரிபூரண அருளால் நிரப்புகிறார். ஆம், இயேசுவைப் பெற்றெடுத்த தாயாகப் போற்றி மகிமைப்படுத்தப்பட்டார். "நீர் கடவுளின் அருளைக் கண்டடைந்தவர்" (லூக் 1: 31) என்ற வாழ்த்து, மரியாள் கடவுள் அருளால் நிரப்பப்பட்டதற்கு சாட்சி. இந்த அருள்மிகப் பெற்றவள்தான், பாவத்தில் உழன்று, சாவினை நோக்கிப் பயணம் செய்யும் ஒரு சமுதாயத்தின் தாயாக, முதல் பெண்ணாக இருக்கிறாள். இந்தத் தாய் இறைமகன் இயேசுவைக் கருத்தாங்கி, பெற்றெடுத்து, வளர்த்து, ஆளாக்கும் பணியை ஏற்க வானதூதர் "அருள்மிகப்பெற்றவளே வாழ்க" என்று அழைத்ததைத் தொடர்ந்து "ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்கிறார். "ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" என்று கத்தோலிக்க திருவழிபாட்டு நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் அருட்பணியாளர்கள் நமக்குக் கூறும் ஆசிமொழி நினைவு கூறத்தக்கது.

அக்காலத்து யூத மக்கள் தங்கள் தொழுகைக்கூட வழிபாட்டில் மட்டும் அல்லாது, அன்றாட வாழ்க்கையிலும் பயன்படுத்திய ஆசியுரை இது. நெடுந்தூரப் பயணத்தை மேற்கொள்ளும்போதோ, முக்கியப் பணிகளைத் தொடங்கும்போதோ, ஒருவருக்கு இத்தகைய ஆசீரைக் கூறினர். இதன்படிதான் கோலியாத்தை எதிர்த்துப் போரிட இளைஞர் தாவீது புறப்பட்ட போது, "சென்று வா" ஆண்டவர் உன்னோடு இருப்பார்

(1சாமு 17:37) என ஆசி கூறிதான் அரசர் சவுல் அவரை அனுப்பி வைத்தார். "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் என் சீடராக்குங்கள்" என நற்செய்தி பணியாற்ற தம் சீடர்களுக்கு ஆணையிட்ட உயிர்த்த இயேசுவும், "இதோ உலகம் முடியும்வரை எந்நாளும் உங்களுடன் இருக்கிறேன்" (மத் 18: 19-20) எனும் ஆசிமொழியுடன்தான் அவர்களை அனுப்பி வைத்தார்.

இவ்வாறு இறைவனுடைய ஆசியெனும் வாக்குறுதிகள் அவரால் அழைத்து அனுப்பப்பட்ட அனைவருடைய வாழ்விலும்நிறைவேறின. எனினும் மரியாவிடம் அது எவரிடமும் இல்லாத அளவு சிறப்பாகவும் முழுமையாகவும் நிறைவேறியது என்பதே உண்மை. ஏனெனில் "ஆண்டவர் உம்மோடு" என அவருக்கு அளிக்கப்பட்ட ஆசியும் வாக்குறுதியும் அவளைப் பெண்களுள் ஆசீர்வதிக்கப்பட்டவளாக" உயர்த்தி அவரிடமிருந்தே இறைமகன் பிறந்து மனிதரான மறைநிகழ்ச்சியில் நிறைவேறின. ஆகவே நாம் இறைமகனை ஏற்று வாழ்ந்தால், அவரின் வழிநடத்துதலுக்கு நம்மையே ஆளாக்கினால், எத்தகைய நிறைவையும், உயர்வையும் அடைவோம் என்பதற்கு மரியா ஓர் உன்னத எடுத்துக்காட்டாகத் திகழ்கிறாள்.

அன்புள்ளவர்களே, நாமும் இறைவனால் நிறைவாக அன்பு செய்யப்பட்டவர்கள். அருள் என்னும் அவரது நீங்கா உறவும், உடனிருப்பும் நம் ஒவ்வொருவரிடமும் குறையாமல் உண்டு. "ஏனெனில் அவர் நம் ஒவ்வொருவருக்கும் அருகிலேயே உள்ளார். அவரைச் சார்ந்துதான் நாம் வாழ்கிறோம், இயங்குகிறோம், இருக்கின்றோம் (திப. 17: 27-28). சற்று சுய ஆய்வுக்கு நம்மை உட்படுத்துவோமா? இறையருளுக்கும் அதன் அழைப்பிற்கும் ஏற்ப நாம் வாழ்கின்றோமா? பிறரது மனிதத்தை மதிக்கும், காத்து வளர்க்கும் அருளாக நமது உறவும், தொடர்பும், சொல்லும், செயலும், வாழ்வும் அமைந்திருக்கின்றனவா? நமக்கு அரும்பெரும் மாதிரியாக நின்று அழைப்பு விடுக்கிறார் மரியாள். இத்தகு மரியாளை "அருள்மிகப் பெற்றவளே வாழ்க", என்று வாழ்த்திய இறைவனோடு நாமும் சேர்ந்து வாழ்த்துவோம். "அருள் மிகப் பெற்றவளே வாழ்க, வாழ்க", என்று போற்றுவோம்.

## ஆசிரியர் தினத்தில் விழாக்காணும் புனித அன்னை தெரேசா

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

அன்பார்ந்தவர்களே, கத்தோலிக்கத் திருஅவை செப்டம்பர் 5ந்தேதி கொல்கத்தாவின் புனித அன்னை தெரேசாவின் விழாவைச் சிறப்பிக்கின்றது. இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவர் இராதாகிருட்டிணன் நினைவாக, இந்நாளை "ஆசிரியர் தினமாக"வும் நாம் கொண்டாடி மகிழ்கிறோம். மனித மாண்பை மதிக்கக் கற்றுத்தந்த ஆசிரியரான அன்னை தெரேசாவுக்கு இந்த நாளில் விழா கொண்டாடுவது மிகவும் சிறப்பான ஒன்று. மாசிதோனியா நாட்டின் ஸ்கோப்ஜே நகரில்,

நிக்கோலா - திரானே தம்பதியரின் மூன்றாவது குழந்தையாக 1910 ஆகஸ்ட் 26ந்தேதி இவர் பிறந்தார். மறுநாளே திருமுழுக்கு வழங்கப்பட்டு, "ஆஞ்சேஸ் கோன்க்சே போஜாக்சியூ" என்ற பெயரும் இவருக்கு சூட்டப்பட்டது. "கோன்க்சே" என்ற அல்பேனிய மொழி வார்த்தைக்கு "ரோஜா மொட்டு" என்று பொருள். 9 வயதில் தமது தந்தையை இழந்த இவர், தாயின் அரவணைப்பில் புனிதமாக வளர்ந்தார். கொல்கத்தாவில் மறைப்பணி செய்த கத்தோலிக்க குருக்கள் பற்றி அறிந்ததும், தாமும் இந்தியாவுக்கு வந்து பணியாற்ற விரும்பினார். 1928 செப்டம்பர் 26ந்தேதி லொரேட்டோ துறவற சபையில் சேர்ந்த இவர், டிசம்பர் மாதம் இந்தியாவுக்குக் கப்பலில் புறப்பட்டார்.

1929 ஜனவரி 6ந்தேதி கொல்கத்தா வந்திறங்கிய ஆஞ்சேஸ், டார்ஜிலிங்கில் உள்ள லொரேட்டோ இல்லத்தில் அருட்சகோதரி ஆவதற்கான பயிற்சியில் சேர்ந்தார். அப்போது, எளிமைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து புனிதரான குழந்தை இயேசுவின் தெரேசா (1873-1897) வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொண்டார். அவரது வாழ்வால் கவரப்பட்ட இவர், 1931 மே 24ந்தேதி அருட்சகோதரியாக முதல் வார்த்தைப்பாடு அளித்தபோது, தமது பெயரை "தெரேசா" என மாற்றிக்கொண்டார். 1937 மே 14ந்தேதி அருட்சகோதரியான இவர், கொல்கொத்தாவில் உள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்ற தொடங்கினார். அங்கிருந்த குடிசைப் பகுதிகளில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை நிலை தெரேசாவை மிகுந்த கவலையில் ஆழ்த்தியது. 1946 செப்டம்பர் 10ந்தேதி டார்ஜிலிங் நோக்கி தொடர்வண்டியில் பயணித்த போது, ஏழைகளுக்குப் பணியாற்ற இறைவன் அழைப்பதை தெரேசா உணர்ந்தார். "மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கேச் செய்தீர்கள்" என்ற இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் இவரது உள்ளத்தில் எதிரொலித்துக் கொண்டே இருந்தன. ஏழைகளின் மகிழ்ச்சியில் இறைவனைக் காண நினைத்த தெரேசா, லொரேட்டோ துறவற சபையில் இருந்து வெளியேறினார். 1948 ஆகஸ்ட் 16ந்தேதி வங்காள பெண்களின் உடையான நீல கரையுள்ள வெள்ளை சேலை அணிந்து, வெறும் 5 ரூபாயுடன் மோட்டிஜில் குடிசைப் பகுதியில் தமது சேவையைத் தொடங்கினார்.

ஏழை மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பது, பசியால் வாடுவோருக்கு உணவளிப்பது, கைவிடப்பட்டோருக்கு ஆதரவளிப்பது, இறக்கும் நிலையில் இருப்போருக்கு உதவி செய்வது ஆகியவற்றைத் தமது நோக்கமாகக் கொண்டு தெரேசா பணியாற்றினார். இவர் ஏழை, எளிய மக்களில் இயேசுவைக் கண்டதால், மக்களால் ஒதுக்கப்பட்ட தொழுநோயாளரையும் தொட்டு, அவர்தம் புண்களைக் கழுவி மருந்திட்டார். இவரின் மனித நேயத்தையும், பிறரன்புச் சேவைகளையும் பார்த்தவர்கள், அனுபவித்தவர்கள். "அன்னை தெரசா" என இவரைப் போற்றத்

தொடங்கினார். சமூகத்தால் ஒதுக்கப்பட்ட மக்களுக்குச் சேவைச் செய்யும் நோக்கத்துடன் அன்னை தெரேசா தொடங்கிய பிறரன்பின் பணியாளர்கள் (மிஷனரீஸ் ஆப் சாரிட்டி) துறவற சபைக்கு, 1950 அக்டோபர் 7ந்தேதி திருத்தந்தை அங்கீகாரம் வழங்கினார். அன்னையின் அன்பு சேவைக்கு, அவரது மாணவிகளான ஆக்னஸ், ஹெர்ட்ரூட் ஆகியோரே முதலில் துணை நின்றார்கள்.

அன்னை தெரேசாவின் தன்னலமற்ற சேவையால் கவரப்பட்ட பலரும், இந்த துறவற சபையில் சேர்ந்து ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும் தொண்டு செய்தனர். ஒரு நாள் குப்பைத் தொட்டியில் வீசப்பட்டிருந்த குழந்தையைக் கண்டு மனம் வருந்திய அன்னை, அதை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டார். உடனடியாக, கைவிடப்பட்ட குழந்தைகளைப் பாதுகாக்க சிசு பவனத்தைத் தொடங்கினார். இப்படி சமூகத்தில் காணப்பட்ட ஒவ்வொரு அவலநிலைக்கும் முடிவுகட்ட விரும்பியதால், அன்னையின் அன்புப்பணி விரிந்து கொண்டே சென்றது. இதன் காரணமாக, உலகின் பல்வேறு நாடுகளிலும் பிறரன்பின் பணியாளர்கள் சபை வேரூன்றத் தொடங்கியது. அன்னை தெரேசாவின் பிறரன்பு சேவைக்கு அங்கீகாரம் வழங்கும் விதமாக, அவருக்கு பல்வேறு விருதுகள் கிடைத்தன. 1979ல் அமைதிக்கான நோபல் பரிசும், 1980ல் பாரத ரத்னா விருதும் இவருக்கு மகுடம் சூட்டின. அன்னையின் சேவையால் கவரப்பட்ட அமெரிக்கா, 1985ஆம் ஆண்டு அவருக்கு அந்நாட்டு குடியுரிமை வழங்கி சிறப்பித்தது. 1997ஆம் ஆண்டு அன்னை தெரேசாவின் உடல்நலம் குன்றியபோது, உலகமே அவருக்காகக் கண்ணீர் வடித்தது. 1997செப்டம்பர் 5ந்தேதி இவர் காலமானதும், உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் நேரில் வந்து இறுதி மரியாதைச் செலுத்தினர். அன்னை தெரேசா மறைந்தபோது, அவரது பிறரன்பின் பணியாளர்கள் சபை 123 நாடுகளில் வேரூன்றி இருந்தது. 2016 செப்டம்பர் 4ஆம் நாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அன்னை தெரசாவிற்கு புனிதர் பட்டம் அளித்து சிறப்பித்தார்.

புனித அன்னை தெரேசாவின் வாழ்வில் இருந்து நாம் சிறப்பான மூன்று பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும். முதலாவது, கடவுளின் பணிக்காக நம்மை அர்ப்பணித்தால், அவர் நம்மை அவரது கருவியாகவும் சாட்சியாகவும் பயன்படுத்துவார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இரண்டாவது, கடவுளின் விருப்பத்துக்கு நம்மைக் கையளிக்கும்போது, நமக்குத் தேவையான அனைத்தையும் அவரே நம்மிடம் கொண்டுவந்து சேர்ப்பார் என்பதை நாம் உணர வேண்டும். மூன்றாவது, கடவுளின் அழைப்பை நமது வாழ்வில் ஏற்றுச் செயலாற்றினால், உலகோரின் கண்கள் முன்பாக அவர் நம்மை மேன்மைப்படுத்துவார் என்பது உண்மை. ஏட்டுக் கல்வி கற்பிக்கும் ஆசிரியராகத் தமது பணியைத் தொடங்கி, வாழ்வியலையும் மனிதநேயத்தையும் கற்பித்த புனித அன்னை தெரேசாவைப் பின்பற்றி, நாமும் கிறிஸ்துவின் சாட்சிகளாகவும், இந்திய சமூகத்திற்கு எடுத்துக்காட்டான ஆசிரியர்களாகவும் வாழ்வோம்.

# அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் அவரது குழுவினர்

திரு. ஜான் அலெக்ஸ்

ஜூலை மாதம் 1936ல் ஸ்பெயின் நாட்டில் தேசியவாதிகளுக்கும் கம்யூனிச பிரிவினருக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்தது (1936-1939). தொடக்கத்தில் திருஅவைக்கு எதிராக மத வெறி கொண்ட போரில் பல்வேறு கிறித்துவ ஆலயங்கள், குருமடங்கள், கன்னியர் இல்லங்களுக்குப் பல தாக்குதல்களைக் கொடுத்தனர். இதில் புனிதர்களின் திருப்பண்டங்கள் சில அழிக்கப்பட்டன. திருஅவையின் பல்வேறு அடையாளங்கள் அழித்து இறைமக்களின் வழிபாடுகளையும் ரத்து செய்தனர். ஆயிரக்கணக்கான திருப்பணியாளர்கள், ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொது நிலையினர் ஆகியோர் படுகொலைச் செய்யப்பட்டனர்.

நம் முன்னாள் திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல், 2000ல் மாபெரும் யூபிலி கொண்டாட்டத்தை முன்னிட்டு, 20ம் நூற்றாண்டின் கிறித்துவ மறைசாட்சிகளின் விபரங்களைச் சேகரித்தார். மார்ச் 2000ல் உரோமை கோலோசியத்தில் நடத்தப்பட்ட திருவழிபாட்டில் ஸ்பெயினின் மறைமாவட்டங்களும் காலந்து கொண்டன. சுமார் 10000க்கும் மேலான ஸ்பெயின் நாட்டு கிறிஸ்தவர்கள் மறைசாட்சிகளாய் கொல்லப்பட்டனர். ஸ்பானிஸ் திருஅவையை உலுக்கிய இச்சம்பவத்தில் தொன் போஸ்கோவின் சலேசியர்களுக்கும், சலேசிய கன்னியர்களுக்கும் இது ஒரு பேரிடியாக அமைந்தது. அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர்களில் 93 பேர் சலேசியக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்பதில் சிறிது மகிழ்ச்சி என்றாலும் சொல்லொன்னா துயரில் அவர்கள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்ததை பார்க்கும்போது நம்மையும் அறியாமல் கண்களில் நீர் ததும்பத்தான் செய்கிறது.

**வாலென்சியாவின் குழுவினர்**

ஜூலை 21, 1936ல் 11 மறைசாட்சிகளைக் கண்டது வாலென்சியா. இரவு முழுமைக்கும் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டில் உருக்குலைந்து போனது வாலென்சியாவின் சலேசிய இல்லம். அச்சமயம் சலேசிய மாநிலத் தலைவர் அருட்பணி. ஜோசப் கலசான்ஸ் அவர்கள் தியானத்தில் கலந்து கொண்டிருந்தார். இவர் 1886ல் தொன் போஸ்கோவை நேரில் சந்தித்த முதல் ஸ்பானிஷ் சலேசியராவார். இந்த இல்லத்தில் இருந்த அனைத்து சலேசியர்களையும் துப்பாக்கி முனையில் ஒன்றாக நிற்கவைத்தனர் கலவரக்காரர்கள். அதில் ஒருவன் "ஏன் அவர்களைச் சுடவில்லை. எல்லோரையும் கொல்லவே இங்கு வந்தோம் என்பது தெரியாதா உங்களுக்கு"? என்றான். பிறகு அனைவரையும் ஒரு சிறைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்கள் 29ம் தேதி வரை கைதிகளாக வைக்கப்பட்டனர். அதன்பின் எதிர்பாராத வகையில் அனைவரையும்

விடுதலைச் செய்தார்கள். மறைசாட்சியாக கொல்லப்படுவதற்கு முன் இடைப்பட்ட காலங்களில் ஒவ்வொருவருக்கும் நிகழ்ந்த ஒரு தனிப்பட்ட கதை உண்டு.

**குழுத் தலைமையாக்கப்பட்ட பணி. ஜோசப் கலசான்ஸ்**

மறைசாட்சிகளான இவர்களது குழுவிற்குத் தலைமையாக்கப் பட்டவர் பணி. கலசான்ஸ், ஏனென்றால் 249 சலேசியர்கள், 14 சலேசிய இல்லங்களைக் கொண்ட தராக்கோனென்ஸ் சலேசிய மாநிலத்தின் தலைமைத் தந்தையாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார் அவர். நவம்பர் 1872ல் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் பணி. ஜோசப் கலசான்ஸ். பின்னாளில் யாருமின்றி அனாதையாகச் சுற்றி வந்தபோது, பார்சிலோனாவில் ஒரு வீட்டில் பணியாளாக வேலைப்பார்த்து வந்த தனது தூரத்து சகோதரியின் பாதுகாப்பில் வளர்ந்தார். இந்த சகோதரியின் மூலமே அவரின் கல்விச் செலவுகள், கல்லூரிக்கு அனுப்பியது எல்லாமே நிகழ்ந்தன. இங்கு தான் 1886ல், தொன் போஸ்கோவை நேரில் சந்திக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. இந்நிகழ்வு அவரது எண்ணங்களில் முத்தாய்ப்பாய் பதிந்த ஒன்றானது.

செப்டம்பர் 1889ல் சலேசிய சபையில் சேர்ந்து, அருளாளர் பிலிப் ரினால்டி அடிகளாரிடமிருந்து தன் முதல் துறவற ஆடையைப் பெற்றார். செப்டம்பர் 1890ல் நித்திய வார்த்தைப்பாட்டுக்குப் பின் 1895ல் சலேசிய குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த முதல் சலேசிய குரு என்ற பெருமைக்குரியவர். தன் சலேசிய பணியோடு சேர்ந்து திருப்பணியையும் 20 ஆண்டுகள் திறம்பட செய்ததால் 1916ல் க்யூபா நாட்டிற்கு சிறப்புப் பணிக்காக அவர் அனுப்பப்பட்டார். ஆறு ஆண்டுகளுக்கு பின் பெரு மற்றும் பொலிவியா சலேசிய மாநிலங்களின் தலைமைத் தந்தையாக பணியமர்த்தப்பட்டார். அதன்பின் 1925ல் மீண்டும் ஸ்பெயினுக்குத் திரும்பப் பெறப்பட்டு, தராக்கோனென்ஸ் சலேசிய மாநிலத்தின் தலைமைத் தந்தையாகப் பணியாற்றினார்.

கனிவன்புடன் பழகும் குணமுடைய அருட்பணி. ஜோசப் கலசான்ஸ் அனைவராலும் போற்றப்பட்டு அன்பு செய்யப்பட்டவர். அவரின் நிர்வாகத்திறமை மற்றும் உடனிருத்தலின் தன்மை அனைத்தும் அவருக்கென ஒரு பாணியை மக்களிடத்தில் உருவாக்கின. தந்தைக்குரிய பாசத்தினால் அவரை எல்லோரும் "இன்னொரு தொன் போஸ்கோ"வாகவே கண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜூலை 21, 1936ல் வெலென்சியா சலேசிய மாநிலத்தில், அங்குள்ள சலேசியர்களுக்கு தியானம் வழங்கிக் கொண்டிருந்தார் பணி. ஜோசப். அப்போது அவர் அதன் மாநிலத் தலைமைத் தந்தையும் ஆவார். அங்கு வந்த கலகக்காரர்கள் அவரையும் அங்கிருந்த சலேசியர்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு சிறையில் அடைத்தனர். ஒரு வாரத்திற்குப் பின் அனைவரையும் விடுவித்தார்கள்.

ஆனால் மீண்டும் ஜூலை 29, 1936ல் பணி. ஜோசப் கலசான்ஸ் மற்றும் அவரோடு இரண்டு வேறு சலேசியர்களையும் கைது செய்து

போராட்டக்காரர்களின் தலைமையிடத்திற்குக் கொண்டு சென்றார்கள். பணி. ஜோசப் கலசான்ஸ் அவர்களின் பையில் வைத்திருந்த அங்கியைப் பார்த்த ஒருவன், "இவன் ஒரு குருவானவன், இவனைக் கொல்ல வேண்டும்" என்றான். இதற்கு முன் தான் ஒரு சலேசிய குரு என்று அவர்களிடம் அருளாளர் ஜோசப் கலசான்ஸ் சொல்லியிருந்தது குறிப்பிடத்தக்கது. அவர்கள் அனைவரையும் ஒரு வாகனத்தில் வலுக்கட்டாயமாக ஏற்றி வெலென்சியாவில் உள்ள சிறைக்கு கொண்டு சென்றார்கள்.

வழியிலேயே ஒருவன் பணி. ஜோசப் கலசான்ஸ் அவர்களின் முகத்துக்கு நேராக துப்பாக்கியை வைத்து சுட்டான். "என் தேவனே" என்றபடியே பணி. ஜோசப் இரத்த வெள்ளத்தில் விழுந்து மடிந்தார். கிறிஸ்துவின்மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையின் பேரிலும் இறைப்பணி செய்ததன் மூலமாகவும் தனது இன்னுயிரைக் கிறிஸ்துவுக்காக ஈந்தார். சலேசிய அழைப்பின் முன்மாதிரியாகவும், கடவுளிடம் கொண்ட முழு நம்பிக்கையினால் கொலைக்காரர்களை மன்னித்தலில் முன்னோடியாகவும் திகழ்ந்தவர் அருளாளர். ஜோசப் கலசான்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது. அச்சிறப்புக்குரியவரை சலேசியர்கள் செப்டம்பர் 22ம் நாளில் நன்றியோடும் பாசத்தோடும் நினைவு கூறுகிறார்கள். திருஅவை பணி. ஜோசப் கலசான்ஸ் அவர்களை மார்ச் 11, 2001ல் அருளாளர் நிலைக்கு உயர்த்தி மற்றவர்களை 28 அக்டோபர் 2007ல் அருளாளர்களாக அறிவித்தது.

## திருஅவைச் செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் ச.ச.,

### பணியாற்றத் தேவையானவை வறுமை, பணிவு, கனிவு

மக்களை மனம் மாற்றவும், அவர்களைக் குணமாக்கவும் செல்லும் சீடர்கள் வறுமை, பணிவு, கனிவு ஆகிய பண்புகளை அணிந்துச் செல்ல வேண்டும் என்று இயேசு விரும்புகிறார் என திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

### மே மாதம் 29ம் தேதி புனிதத் திருத்தந்தை 6ம் பவுல் திருநாள்

புனிதத் திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள், 1920ம் ஆண்டு மே மாதம் 29ம் தேதி அருள் பணியாளராகத் திருப்பொழிவு பெற்றதால் அந்நாளை அவரது திருநாளாக அறிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். 2018ம் ஆண்டு அக்டோபர் 14ம் தேதி புனிதராக உயர்த்தப்பட்ட திருத்தந்தை 6ம் பவுல் அவர்களின் திருநாள் மே மாதம் 29ம் நாள் கொண்டாடப்பட வேண்டும் என்று திருத்தந்தை அவர்கள் வழங்கிய அறிக்கை 2019 பிப்ரவரி 6, புதனன்று வெளியிடப்பட்டது.

### 800 ஆண்டுகளுக்குப் பின்னர் அமைதிக்குப் புதிய அர்ப்பணம்

பிப்ரவரி 04 அசிசி நகர் புனித பிரான்சிசின் பெயரைத் தாங்கியிருக்கும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் அமைதிக்காகத் தாகம் கொள்ளும் விசுவாசியாக தன்னை முஸ்லீம் சகோதரர்களிடம்

வெளிப்படுத்தினார். உரையாடலின் முக்கியத்துவம் கடவுளின் பெயரால் ஆற்றப்படும் பயங்கரவாதம் மற்றும் அனைத்து விதமான வன்முறைகளைப் புறக்கணித்தல், பெண்களின் நிலையை மேம்படுத்துவதற்கு ஆதரவு, இயற்கையை மதித்தல் உட்பட பல கொள்கைகளுக்கு இந்த ஆவணத்தில் இவ்விரு தலைவர்களுக்கும் இசைவு தெரிவித்துள்ளனர்.

## இந்திய திருஅவை பணிக் குழுக்களின் தலைவர்கள் தேர்வு

சுற்றுச்சூழலுக்கென புதிதாக ஒரு பணிக்குழுவை இந்திய ஆயர் பேரவை உருவாக்கியுள்ளது. தமிழகத்தின் மாமல்லபுரத்தில் 2019 சனவரி மாதம் 7ம் தேதி முதல் 14ம் தேதி வரை இடம் பெற்ற இந்திய இலத்தீன் வழிபாட்டுமுறை ஆயர்கள் பேரவையின் ஆண்டுக்கூட்டம், இரு புதிய பணிக்குழுக்களை உருவாக்கியுள்ளதோடு பல்வேறு பணிக்குழுக்களுக்கு புதிய தலைவர்களையும் தேர்வுச் செய்துள்ளது. கோவா மற்றும் டாமன் பேராயர் பிலிப்பு நேரி பெராரோ அவர்களை தலைவராகவும், சென்னை மயிலை பேராயர், ஜார்ஜ் ஆண்டனிசாமி அவர்களை, மீண்டும் துணைத் தலைவராகவும், டெல்லி பேராயர் அனில் ஜோசப் தாமஸ் கூட்டோ அவர்களை, மீண்டும் பொதுச்செயலராகவும் தேர்வுச் செய்துள்ள இந்திய இலத்தீன் வழிபாட்டுமுறை ஆயர் பேரவை சுற்றுச்சூழலை மையப்படுத்திய ஒரு பணிக்குழுவையும், சிறிய கிறிஸ்தவக் குழுமங்களை மையப்படுத்திய ஒரு பணிக்குழுவையும், புதிதாக உருவாக்கியுள்ளது.

## தூத்துக்குடி மறைமாவட்டத்தின் புதிய ஆயர் நியமனம்

தூத்துக்குடி மறைமாவட்டத்தின் ஆயராகப் பணியாற்றி வந்த ஆயர் யுவான் அம்புரோஸ் அவர்கள், தன் பணியிலிருந்து ஓய்வு பெற விரும்பி, அனுப்பிய விண்ணப்பத்தை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டு இம்மறைமாவட்டத்தின் புதிய ஆயராக, அருள்பணி ஸ்டீபன் ஆன்டனி பிள்ளை அவர்களை நியமித்துள்ளார். 1952ம் ஆண்டு ஜூன் 22ம் தேதி கோட்டாறு மறைமாவட்டத்தின் கீழமணக்குடி என்ற ஊரில் பிறந்த ஸ்டீபன் ஆன்டனி பிள்ளை அவர்கள், 1979ம் ஆண்டு மே 7ம் தேதி வேலூர் மறைமாவட்டத்தின் அருள்பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்டார். 1986ம் ஆண்டு முதல் 6 ஆண்டுகள் கரீபியன் பகுதியில், குவாதலூப் தீவில் மறைப்பணியாளராக உழைத்தார். பங்கு அருள்பணியாளராகவும், இறையியல் பேராசிரியராகவும், பணியாற்றிவந்த அருள்பணி ஆன்டனி பிள்ளை அவர்கள், வேலூர் மறைமாவட்ட பேராலயத்தின் பங்கு அருள்பணியாளராகவும், அம்மறைமாவட்டத்தின் முதன்மை அருள்பணியாளராகவும் பணியாற்றியுள்ளார்.

## சுடர் வாசகர் போட்டி - 62 சரியான விடைகள்

1. 1969ம் ஆண்டு ஆகஸ்டு 22ம் தேதி
2. புனித தோமினிக் சாவியோவை
3. 1979ம் ஆண்டு 9ம் தேதி
4. இயேசு
5. 1950ம் ஆண்டு 12ம் பத்திநாதரால்
6. இரும்புக் கட்டிலில் கிடத்தி அதனடியில் நெருப்பு வைத்துக் கொன்றனர்.
7. 50வது வயதில்
8. உரோமையில்
9. 13ம் சிங்கராயர் திருத்தந்தையின் பரிந்துரையால்
10. புனித பர்த்தலமேயு
11. கவிஞர் ஹெர்மான்
12. கன்னிமரியாவின் விண்ணேற்பு பெருவிழா
13. புனித லாரன்சைக் குறித்து புருடெனியா என்ற வரலாற்று ஆசிரியர் கூறியது
14. புனித தோமினிக்
15. புனித தொன்போஸ்கோ

**குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்**

S. Gnanaprakasam, Chennai

V. Peter, Tirunelveli

A. Megala, Coimatore

## சுடர் வாசகர் போட்டி - 63

1. இறையரசின் நற்செய்தி என்று அழைக்கப்படும் நற்செய்தி எது?
2. புனித ஜெரோம் விவிலியத்தை எந்த மொழியில் மொழி பெயர்த்தார்?
3. திருத்தந்தையை இந்தியாவிற்கு அழைத்த மக்களவை உறுப்பினர் யார்?
4. "ஆஞ்சேஸ் கோன்க்சே போஜாக்சியூ" இது யாருடைய பெயர்?
5. புனித வின்சென்ட் தெ பாலுக்கு உதவிய குடும்பத்தின் பெயர் என்ன?
6. மன்னன் எரோக்ளியுஸிடம் எருசலேம் ஆயர் சக்கரியாஸ் கூறியது என்ன?
7. திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் செப்டம்பர் 2ல் கொண்டாடச் சொன்ன விழா எது?
8. அன்பின் பணியாளர் சபையை நிறுவியவர் யார்?
9. உரோமை நகர் காவலர் பதவியை பெற்றவர் யார்?
10. திருத்தந்தை புதன்கிழமை மறைக்கல்வியில் குடும்பங்கள் பற்றி எத்தனை மறையுரைகளை ஆற்றியுள்ளார்?
11. பிறரன்பு சகோதரிகள் சபையை உருவாக்க பொருளுதவி செய்தவர் யார்?
12. மத்தேயு என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன?
13. கிறிசோஸ்தோம் என்பதன் பொருள் என்ன?
14. கீழை நாடுகளின் லூர்து நகர் என்பது எது?
15. "இறைவனின் ஊழியர்களுக்கெல்லாம் கடை ஊழியன்" இதை முதலில் பயன்படுத்தியது யார்?

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை செப்டம்பர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று

பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

குழந்தை இயேசுவின் புனித தெரேசா
புனித காவல் தூதர்கள்
அசிசி நகர் புனித பிரான்சிஸ்
அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி
புனித ஜெபமாலை அன்னை
புனித அவிலா தெரேசா
புனித லூக்கா
புனித இரண்டாம் ஜான் பால்
அருளாளர் அலோசியஸ் குவனெல்லா
புனிதர்கள் சீமோன், யூதா
அருளாளர் தொன் மைக்கெல் ரூவா
பொதுக்காலம் ஞாயிறுகள்

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

அருளாளர் அலெக்சாண்ட்ரீனா மரிய தா கோஸ்தா வாழ்வு தரும்பாடம்
அக்டோபர் மாத புனித தெரேசாக்கள்...
ஏழ்மையாய் வாழ்ந்த செல்வந்தர் புனித அசிசி
திருஅவை செய்திகள்


**தீபகச் சுடர்**

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:.....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

## செப்டம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | ஞா | **பொதுக்காலம் 22ம் ஞாயிறு** | I. சீரா 3: 17-18,20,28-29<br>II. எபி 12: 18-19, 22-24 | லூக் 14: 1.7-14 |
| 2 | தி | ரோஸ்கில்டின் புனித வில்லியம் | 1தெச 4: 13-18 | லூக் 4: 16-30 |
| 3 | செ | புனிதப் பெரிய கிரகோரி | 1தெச 5: 1-6, 9-11 | லூக் 4: 31-37 |
| 4 | பு | புனித ரோசாலியா | கொலோ 1: 1-8 | லூக் 4: 38-44 |
| 5 | வி | கொல்கத்தா நகர்ப் புனித தெரசா | கொலோ 1: 9-14 | லூக் 5: 1-11 |
| 6 | வெ | | கொலோ 1: 15-20 | லூக் 5: 33-39 |
| 7 | ச | புனித ஃபெரடிக் | கொலோ 1: 21-23 | லூக் 6: 1-5 |
| 8 | ஞா | **புனித கன்னி மரியாவினுடைய பிறப்பு** | I. சாஞா 9: 13-18<br>II. பில 9: 10,12-17 | லூக் 14: 25-33 |
| 9 | தி | புனித பீட்டர் கிளாவர் | கொலோ 1: 24, 2: 3 | லூக் 6: 6-11 |
| 10 | செ | புனித நிக்கோலாஸ் | கொலோ 2: 6-15 | லூக் 6: 12-19 |
| 11 | பு | புனித பப்பனுசியஸ் | கொலோ 3: 1-11 | லூக் 6: 20-26 |
| 12 | வி | மரியாவின் தூய்மைமிகு பெயர் | கொலோ 3: 12-17 | லூக் 6: 27-38 |
| 13 | வெ | புனித ஜான் கிறிசோஸ்தம் | 1திமொ 1: 1-2, 12-14 | லூக் 6: 39-42 |
| 14 | ச | திருச்சிலுவையின் மாட்சி | எண் 21: 4-9 (அ) பிலி 2: 6-11 | யோவா 3: 13-17 |
| 15 | ஞா | **பொதுக்காலம் 24ம் ஞாயிறு** | I. விப 32: 7-11, 13-14<br>II. 1திமொ 1: 12-17 | லூக் 15: 1-32 |
| 16 | தி | புனிதர்கள் கொர்னேலியுஸ், சிப்பிரியன் | 1திமொ 2: 1-8 | லூக் 7: 1-10 |
| 17 | செ | புனித ராபெர்ட் பெல்லார்மின் | 1திமொ 3: 1-13 | லூக் 7: 11-17 |
| 18 | பு | கூப்பர்ட்டினோவின் புனித யோசேப்பு | 1திமொ 3: 14-16 | லூக் 7: 31-35 |
| 19 | வி | புனித ஜனுவாரியுஸ் | 1திமொ 4: 12-16 | லூக் 7: 36-50 |
| 20 | வெ | | 1திமொ 6: 2-12 | லூக் 8: 1-3 |
| 21 | ச | புனித மத்தேயு | எபே 4: 1-7,11-13 | மத் 9: 9-13 |
| 22 | ஞா | **பொதுக்காலம் 25ம் ஞாயிறு** | I. ஆமோ 8: 4-7<br>II. திமொ 2: 1-8 | லூக் 16: 1-13 |
| 23 | தி | பியத்தெல்சினா நகர்ப் புனித பியோ | எஸ் 1: 1-6 | லூக் 8: 16-18 |
| 24 | செ | அலங்கார உபகார மாதா | எஸ் 6: 7-8.12.14-20 | லூக் 8: 19-21 |
| 25 | பு | புனித சியோல்பிரிட் | எஸ் 9: 5-9 | லூக் 7: 31-35 |
| 26 | வி | புனிதர்கள் கோஸ்மாஸ், தமியான் | ஆகா 1: 1-8 | லூக் 9: 1-6 |
| 27 | வெ | புனித வின்சென்ட் தெ பால் | ஆகா 2: 1-9 | லூக் 9: 18-22 |
| 28 | ச | புனித வென்செஸ்லலாஸ் | செக் 2: 5-9,14-15 | லூக் 9: 43-45 |
| 29 | ஞா | **பொதுக்காலம் 26ம் ஞாயிறு** | I. ஆமொ 6: 1.4-7<br>II. 1திமொ 6: 11-16 | லூக் 16: 19-31 |
| 30 | தி | புனித ஜெரோம் | செக் 8:1-8 | லூக் 9: 46-50 |